**உதவி அமர்வு நீதிமன்றம், செஞ்சி.**

**முன்னிலை: திரு. A.கதிரவன், B.A., L.L.M.,**

**உதவி அமர்வு நீதிபதி, செஞ்சி.**

2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் நாள் சனிக்கிழமை

அமர்வு வழக்கு எண்.42/2017

CNR.No.TNVP19-000087-2017

(நீதித்துறை நடுவர், செஞ்சி, அவர்களால் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.44/2016-ன்படி மேல்விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது).

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசு- காவல் ஆய்வாளர்,<br>வளத்தி காவல்நிலையம்<br>குற்ற எண்.156/2016 | |
| எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | 1. குப்பன் (வயது 46/16). த/பெ. ராமன்<br>2. பிரகாஷ் (எ) ஞானமூர்த்தி, வயது 23/16<br>த/பெ. குப்பன்<br>3. கஸ்தூரி, (நீத்தார்) வயது 40/2016,<br>க/பெ குப்பன் . 1 முதல் 3 எதிரிகள்<br>முகவரி பள்ளிக்கூடத்தெரு,<br>நெகனூர் புதூர் கிராமம், செஞ்சி வட்டம்.<br>4. மலர்விழி, வயது 25/2016,<br>க/பெ.முருகன்<br>5. முருகன் வயது 26/2016,<br>த/பெ. கோவிந்தசாமி<br>4, 5 எதிரிகள் முகவரி ஊரல் கிராமம்,<br>திண்டிவனம் தாலுக்கா. | |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் | | |
| சட்ட விரோத கலக கும்பலாக ஆயுதங்களுடன் ஒன்று கூடிய குற்றத்திற்காக | இதச பிரிவு 148 ன் கீழ் | 1, 2, 4, 5 எதிரிகள் மீது |
| புகார்தாரர் சக்திவேலின் வீட்டில் அத்து மீறி நுழைந்த குற்றத்திற்காக | இதச பிரிவு 448 ன் கீழ் | 1, 2, 4, 5 எதிரிகள் மீது |

| | |
|---|---|
| தகாத வார்த்தைகளால் பேசிய குற்றத்திற்காக | இதச பிரிவு 294(பி) ன் கீழ் 1, 2, 4, 5 எதிரிகள் மீது |
| மரணம் விளைவிக்கும் வகையில் பொது உட்கருத்துடன் துன்புறுத்திய குற்றத்திற்காக<br>மேற்படி குற்றசெயலில் உடனிருந்து பங்கு வகித்த குற்றத்திற்காக | இதச பிரிவு 307 ன் கீழ் 1, 2, 5 எதிரிகள் மீது<br>1 வது எதிரி மீது (3counts )<br>இ.த.ச.பிரிவு 307 உ/இ 149 4 வது எதிரி மீது |
| ஆயுதங்களால் சொற்பகாயம் விளைவித்த குற்றத்திற்காக | இ.த.ச.பிரிவு 324 (2 counts) 2 வது எதிரி மீது |
| தன்னிச்சையாக காயம் விளைவித்த குற்றத்திற்காக | இ.த.ச.பிரிவு 323 (3 counts) 4 வது எதிரி மீது |
| ஆயுதங்களுடன் கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக | இ.த.ச.பிரிவு 506 (ii) ன் கீழ் 1, 2, 4, 5 எதிரிகள் மீது |
| எதிரிகளின் வாதுரை | குற்றவாளிகள் இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரை பற்றிய விவரம் | *முடிவாக 1, 2, 4, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 148-ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா ஒரு ஆண்டு மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/ விதித்தும் அபராதம் செலுத்தத் தவறினால் தலா ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச.பிரிவு 448 ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/ விதித்தும் அபராதம் செலுத்தத் தவறினால் தலா இரண்டு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 2 மற்றும் 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 307 ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா 5 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.5,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா மூன்று மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் 1ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 307( 3 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 5* |

| | |
|---|---|
| | வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.5,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா மூன்று மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 4 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 307 உ.இ 149 ன்படியான குற்றச்சாட்டிற்கு 3 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் 2 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 324( 2 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.1,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா ஒரு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 4 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323( 3 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா ஒரு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச.பிரிவு 235(2)ன் கீழ் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2, 4, 5 எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட மேற்கண்ட சிறை தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச 235(2)ன்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 1 மற்றும் 5 எதிரிகள் ஏற்கனவே சிறையிலிருந்த 11.06.2016 முதல் 14.09.2016 வரையிலான காலத்தை கு.வி.மு.ச.பிரிவு 428 ன் கீழ் 1 மற்றும் 5 எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனை காலத்திலிருந்து கழிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் 1, 2, 4, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(b), 506(ii)-ன்படியான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று 1, 2, 4, 5 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 24.04.2026-ஆம் தேதியன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் திரு.ஜி.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2,4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.சி.சண்முகம், திரு.D.மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போயும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.......

## தீர்ப்புரை

2) இவ்வழக்கின் புகார்தாரர் சக்திவேல் என்பவருக்கு சம்பவத்தில் காயமுற்ற ராமன் என்பவர் தகப்பனார், சாட்சி மாரியம்மாள் மனைவி, சாட்சிகள் சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோர் மகள்களும் ஆவார்கள் என்றும், மேற்படி அனைவரும் நெகனூர் புதூர் கிராமம், செஞ்சி வட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், 1ம் எதிரி, ராமனின் மூத்த மகனும், புகார்தாரர் சக்திவேலின் மூத்த சகோதரரும் ஆவார் என்றும், 1வது எதிரிக்கு 2ம் எதிரி மகன், 3 வது எதிரி மனைவி, 4 வது எதிரி மகளும், 5 வது எதிரி மருமகனும் ஆவார்கள் என்றும், ராமன் தனது பொதுக்குடும்ப சொத்துக்கள் 7 ஏக்கர் நிலத்தை 1வது எதிரிக்கும், புகார்தாரருக்கும் தலா 3 ஏக்கர் பாகம் பிரித்துக் கொடுத்தும், தன் வீதத்திற்கு 1 ஏக்கர் வைத்துக்கொண்டும் தன் வயோதிக காலத்தில் தன் இளையமகனான புகார்தாரர் சக்திவேலுவின் பராமரிப்பில் தன் மனைவி பவுனம்மாளுடன் வசித்து வந்ததாகவும்,

1வது எதிரி தனக்கு ஒதுக்கப்பட்ட பாக நிலத்தில் கல்லாங்குத்து உள்ளதால் தன் தகப்பனார் ராமனின் 1 ஏக்கர் பாக நிலத்தை கேட்டு பிரச்சனைகள் செய்தும், சக்திவேலின் பராமரிப்பில் இருந்ததால் சக்திவேலுவின் மீது 1வது எதிரியின் குடும்பத்தினர் விரோதத்துடன் இருந்து வந்துள்ளனர் என்றும், வழக்கு சம்பவத்திற்கு முன் கடந்த 2015ம் வருடம் ஆடி மாதம் ஊர் பிள்ளையார் கோயில் சீட்டு பணம் ரூ.3,000/- 1வது எதிரியின் தகப்பனார் எடுத்த போது 1வது எதிரி தன் குடும்ப செலவிற்கு கேட்கவே மேற்படி சீட்டை கட்டிக்கொள்ளுமாறு 1வது எதிரியிடம் கூறி மேற்படி சீட்டுத் தொகையை கொடுத்துள்ளார் என்றும், அதனை 1வது எதிரி கட்டாததால் கடந்த 09.06.2016ம் தேதி அன்று ஊர் பஞ்சாயத்தார் ராமனை கேட்டதால் அதை ராமன் 1வது எதிரியிடம் கேட்ட போது அவர் சீட்டை நீதானே எடுத்தாய், நீயே கட்டிக்கொள் என்று கூறவே இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது என்றும், மறுநாள் கடந்த 10.06.2016ம் தேதி மாலை 5.00 மணியளவில் புகார்தாரர் சக்திவேலின் வீட்டில் மேற்படி ராமன் தன் மனைவி பவுனம்மாள், மகன் சக்திவேல், மருமகள் மாரியம்மாள், பேத்திகள், சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோருடன் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது 1 முதல் 5 எதிரிகள் ஆயுதத்துடன் சட்ட விரோத கலக கும்பலாக சக்திவேலின் வீட்டிற்கு வந்து 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல் வழியாகவும், 2, 3, 4 எதிரிகள் பின்வாசல் வழியாகவும் சக்திவேலின் வீட்டில் சாட்சிகளை தாக்கி கொலை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளனர் என்றும், அதனை பார்த்த ராமன் ஏன்டா இங்க வர்றீங்க எதுவா இருந்தாலும் அப்புறமா பேசிக்கலாம் என்றுகூறிய போது அவரை

கொலை செய்யும் நோக்கில் 5வது எதிரி 'தெவிடியாபையா என் மாமனாரை ஏமாத்தவடா பாக்கற தெவிடியாபையா இத்தோடு ஒழிந்துபோடா' என்று தலையிலும், வலதுபக்கம் மார்பிலும் கொடுவா கத்தியால் வெட்டியும், அந்த கொடுவாகத்தியை பிடுங்கி 1வது எதிரியானவர் மறிக்கவந்த சக்திவேலுவை கொலை செய்யும் நோக்கில் இத்தோடு செத்துப்போடா என்று சொல்லி தலையில் வெட்டியும், அப்பொழுது 2, 3 மற்றும் 4 எதிரிகள் 'தெவிடியாபசங்களா, நாராகூதிகளா' என அசிங்கமாக திட்டியும், 2வது எதிரி துடுப்பால் ராமனின் வாய் மற்றும் இடது தோள்பட்டை, இடது முழங்கை, இடது முன்கை ஆகிய இடங்களில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், தடுத்த சாட்சி மாரியம்மாளின் உடம்பு மற்றும் கணுக்காலில் தாக்கியும் சாட்சிகள் சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோரின் தலைமுடியை பிடித்து 3 மற்றும் 4 எதிரிகள் கையாலும், காலாலும் தாக்கியுள்ளனர் என்றும், மேலும் அவர்களை கொலை செய்யும் நோக்கில் கொடுவாகத்தியால் 1வது எதிரி சாட்சி கலைமணியின் முன் நெற்றியிலும், குணசுந்தரியின் தலையில் வெட்டியும் அந்த கொடுவா கத்தியை பிடுங்கிய 2வது எதிரியும் சாட்சி சங்கரியின் தலையில் கொலை செய்யும் நோக்கில் வெட்டியுள்ளார் என்றும், மேலும் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1முதல் 5வரை உள்ள எதிரிகள் மேற்படி காயமுற்ற சாட்சிகளை பார்த்து 'சொத்தை ஏமாற்றி வாங்கிவிட்டு எங்களை ஊரில் ஏளனமாடா பேசிறீங்க தெவிடியாபசங்க' என்று அசிங்கமாக திட்டி கையாலும், காலாலும் எட்டி உதைத்தும் மிரட்டி சென்றுள்ளனர் என்றும் மேற்படி சம்பவத்தில் ராமனுக்கு கொடுங்காயமும், சாட்சிகள் சக்திவேல், மாரியம்மாள், சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோருக்கு

சொற்பகாயங்களையும் விளைவித்துள்ளனர் என்றும், எனவே 1வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 307 (3 எண்ணிக்கை), 506(ii) -ன்படியும், 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 324, 307, 506(ii) -ன்படியும், 3, 4 எதிரிகள் ன் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 449, 294(b), 341, 323, 506(ii) - 307 உ/இ 149-ன்படியும், 5 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 307 , 506(ii) -ன்படியும் தண்டிக்கத்தக்கது என்று வளத்தி காவல்நிலைய ஆய்வாளர் ஒரு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) செஞ்சி நீதித்துறை நடுவர் அவர்கள் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி எதிரிகள் மீதான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் பிரிவு 209(அ) குவிமுச-ன் படி வழக்கை மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களுக்கு சமர்பித்துள்ளார்.

4) மேற்படி வழக்கு சம்மந்தப்பட்ட குற்றம் இந்நீதிமன்ற ஆள்வரைக்குள் அடங்குவதால் மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் வழக்கை இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பியுள்ளார்.

<u>எதிரிகள் மீதான குற்றச்சாட்டு</u>

5) இந்நீதிமன்ற அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆகியோரின் வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்து, எதிரிகள் மீது பிரிவு 226 குவிமுச-வை பின்பற்றி ஆவணங்கள் அடிப்படையில்

1ம் எதிரி மீது 148, 448, 294(b), 307(3 counts). 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 2 ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 324 (2 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 4 ம் எதிரி மீது 148, 448, 294(b), 307 உ/இ 149, 323 (2 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 5 ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 506 (ii) இதச பிரிவுகள் கீழும், குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சம் விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றவாளி இல்லை என்று பதில் அளித்துள்ளனர். அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

6) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.29 வரையான சாட்சிகளை விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், சா.பொ.1, சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டும் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது. அ.சா.1ன் சாட்சியத்தில் புகார் வாக்குமூலம் குறித்தும் அதில் உள்ள அவரது கையெழுத்து குறித்தும் சாட்சியமளித்துள்ள போதும் நீதிமன்றத்தால் புகார் வாக்குமூலத்தை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யும் பகுதி அதில் தவறுதலாக விடுபட்டுள்ளது. எனவே புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக பரிசீலணைக்கு ஏற்கப்படுகிறது. மேலும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ராமனின் காயச்சான்று தவறுதலாக அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டு பின் பார்வை மகசர் மீண்டும் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே பார்வை மகசர் அ.சா.ஆ.5 & 15 ஆகவும் ராமனின் காயச்சான்று அ.சா.ஆ.5(அ) வாகவும் பரிசீலணைக்கு ஏற்கப்படுகிறது.

7) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சிய விவரம் :

7.1) அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சக்திவேல் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், தனது அப்பாவுக்கு சொந்தமான நிலத்தில் தனக்கு பாதி பங்கு கொடுத்தார் என்றும், தனது அண்ணன் குப்பனுக்கு பாதி பங்கு கொடுத்தார் என்றும், தனது அப்பா 80 சென்ட் நிலத்தினை எடுத்துக்கொண்டு, தன்னுடன் இருந்து கொண்டே அந்த நிலத்தில் பயிர் செய்து வந்தார் என்றும், தனது அண்ணன் குப்பன் 1-ஆம் எதிரி, 5 ம் எதிரி முருகன் குப்பனின் மருமகன், 3-ஆம் எதிரி ஞானமூர்த்தி 1-ஆம் எதிரியின் மகன் என்றும், சம்பவத்தன்று மாலை 5.00 மணிக்கு தான் தனது வீட்டில் டி.வி பார்த்து கொண்டிருந்போது, தனது அண்ணன் குப்பன்/1ம் எதிரி, 2ம் எதிரி ஞானமூர்த்தி, 4ம் எதிரி மலர்விழி, கஸ்தூரி, 5ம் எதிரி முருகன் ஆகியோர் தனது வீட்டிற்குள் வந்து, 1ம் எதிரி குப்பனும், 2ம் எதிரி ஞானமுர்த்தியும் தனது அப்பா ராமனை தோள்பட்டையில் கொடுவாளால் வெட்டினார்கள் என்றும், தனது மகள் சங்கரி, குணசுந்தரி, கலைவாணி ஆகியோரை முருகன், கஸ்தூரி, ஞானபிரகாஷ் வெட்டினார்கள் என்றும், தனது மகள் சங்கரியின் நெற்றியில் வெட்டினார்கள் என்றும், கலைமணியை தலையின் உச்சி பகுதியில் வெட்டினார்கள் என்றும், 5 எதிரிகளும் தன்னை அடித்தார்கள் என்றும், தனது அண்ணன் குப்பனும், ஞானமூர்த்தியும் இதோடு ஒழிந்து போங்கள் என்று வெட்டினார்கள் என்றும், பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் தங்கள் அனைவரையும் 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், தனது அப்பா ராமன் ஜிப்மர்

ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருக்கும்போது, இரவு 7.45 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், சம்பவம் குறித்து போலீஸார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கொடுவாள், மர துடுப்பு ஆயுதங்களை தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) அ.சா.2-ஆக விசாரிக்கப்பட்ட மாரியம்மாள் என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 அன்று மாலை 5.00 மணிக்கு தனது கணவர், தனது மாமனார், தனது 3 குழந்தைகள் ஆகியோர் தங்கள் வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரிகள் குப்பன், அவரது மருமகன், கஸ்தூரி, மலர்விழி, ஞானபிரகாஷ் ஆகியோர் கொடுவா கத்தியுடன் வாசல் வழியாக வந்து தன்னையும், தனது கணவரையும் கத்தி, கொடுவாகத்தி, மரதுடுப்பு ஆகியவற்றால் அடித்தார்கள் என்றும், தனக்கு முதுகில் தடியால் அடித்தார்கள் என்றும், இடதுபுற முட்டிக்கு கீழ் காலில் வெட்டிவிட்டார்கள் என்றும், தனது மகள் சங்கரி, கலைமணி ஆகியோருக்கு மண்டையில் வெட்டுக்காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், தனது குழந்தைகள் அலறி கத்தியதால் ஊர் மக்கள் ஆம்புலன்ஸை வரவழைத்து செஞ்சி அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார்கள் என்றும், தனது கணவரும், மாமனாரும் ரொம்பவும் முடியாமல் போனதால் முண்டியம்பாக்கம் அனுப்பிவைத்தார்கள் என்றும், தனது கணவரும், மாமனாரும் மீண்டும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்து 2 நாள் சிகிச்சை பெற்றார்கள் என்றும், மீண்டும் தனது கணவரும் மாமனாரும் பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றும், பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலிருந்த தனது மாமனார் இறந்துவிட்டார் என்றும், வழக்கு சம்பவம்

குறித்து போலீஸார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

7.3) அ.சா.3-ஆக விசாரிக்கப்பட்ட சங்கரி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 அன்று மாலை 5.00 மணிக்கு சண்டை நடந்தது என்றும், தங்கள் வீட்டில் தனது அப்பா, அம்மா, தனது தாத்தா ராமன், தனது தங்கை கலைமணி, குணசுந்தரி ஆகியோர் இருந்தபோது, குப்பன், கஸ்தூரி, மலர்விழி, முருகன், ஞானமூர்த்தி ஆகிய 5 எதிரிகளும் தங்கள் வீட்டுக்கு முன்புறம் குப்பனும், முருகனும் மற்றும் பின்புறத்திலிருந்து கஸ்தூரி, மலர்விழி, ஞானமூர்த்தி ஆகியோர் வந்து, தனது தாத்தாவை அடிக்க வந்தார்கள் என்றும், குப்பன், முருகன் ஆகியோர் தனது தாத்தாவை கொடுவா கத்தியால் மண்டையிலும், வலது மார்பிலும் வெட்டினார்கள் என்றும், அதனை தடுக்க சென்ற தனது அப்பாவை குப்பன், முருகன் கையிலிருந்த கொடுவாவை வாங்கி தனது அப்பாவின் மண்டையில் வெட்டினார்கள் என்றும், தனது அம்மாவின் காலிலும், முதுகிலும் ஞானமூர்த்தி வெட்டினார் என்றும், பின்னாலிருந்து வந்த கஸ்தூரியும், மலர்விழியும் தன்னையும், தனது தங்கைகளையும் முடியை பிடித்து அடித்து வெட்டினார்கள் என்றும், கலைமணி மற்றும் குணசுந்தரியின் மண்டையில் வெட்டுக்காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டினார் என்றும், இதோடு செத்துப்போடா என்று தனது அப்பாவை அடித்தார்கள் என்றும், சத்தம் கேட்டு ஊர் மக்கள் வந்து 108 ஆம்புலன்ஸில் செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், தனது அப்பாவுக்கும், தாத்தாவுக்கும் செஞ்சி அரசு மருத்துவமனையின் மருத்துவம் பார்க்க

வசதியில்லை என்று முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தனது அப்பாவும், தனது தாத்தாவும் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று விட்டு 14.06.2016 அன்று வீட்டிற்கு வந்தார்கள் என்றும், மீண்டும் உடம்பு சரியில்லை என்று 16.06.2016 அன்று செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும், அங்கு 3 நாள் இருந்துவிட்டு வீட்டிற்கு வந்தார்கள் என்றும், மீண்டும் உடம்பு சரியில்லை என்று சொல்லி பாண்டிச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்கு சென்றார்கள் என்றும் 27.06.2016 அன்று இரவு 7.45 மணிக்கு தனது தாத்தா இறந்துவிட்டதாகவும், தனது தாத்தாவின் இறப்பிற்கு 5 எதிரிகள் தான் காரணம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.4). அ.சா.4-ஆக விசாரிக்கப்பட்ட கலைமணி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 அன்று மாலை 5.00 மணிக்கு தங்கள் வீட்டில் தனது அப்பா, தனது அம்மா, தாத்தா, பாட்டி, பௌனம்மாள், தனது அக்கா, தங்கை குணசுந்தரி ஆகியோர் வீட்டில் டி.வி பார்த்துக்கொண்டிருந்தபோது, தங்கள் வீட்டிற்குள் குப்பனும், முருகனும் முன்வாசல் வழியாக உள்ளே வந்து கையில் கொடுவா கத்தியும், கட்டையும் எடுத்து வந்து சேரில் உட்கார்ந்திருந்த தனது தாத்தாவை அப்போது கீழே தள்ளி கட்டையால் வாய் பகுதியிலும், தோள்பட்டையிலும் அடித்தார் என்றும், குப்பன் தனது தாத்தாவை தலையில் வெட்டினார் என்றும், தடுக்கபோன தனது அப்பாவை குப்பன் தலையில் வெட்டினார் என்றும், குப்பன் தனது அம்மாவின் முதுகில் கட்டையால் அடித்தார் என்றும், காலில் வெட்டினார் என்றும், குப்பன் தன்னுடைய தலையிலும், பாப்பா குணசுந்தரி தலையிலும் வெட்டினார் என்றும் சங்கரியை முருகன் நெற்றியில்

வெட்டினார் என்றும், சத்தம் கேட்டு ஊர் பொது மக்கள் வந்து பார்த்து 108 ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தனது தாத்தா 24.06.2016 அன்று பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது இறந்துவிட்டார் என்றும், சம்பவம் குறித்து போலீஸார் தன்னை விசாரித்தார்கள் என்றும் அ.சா.4 சாட்சியம் அளித்துள்ளார்.

7.5). அ.சா.5-ஆக விசாரிக்கப்பட்ட குணசுந்தரி தனது சாட்சியத்தில் தான் 8 ஆம் வகுப்பு படித்து கொண்டு இருக்கிறேன் என்றும் தான் வக்கீலிடம் வந்துள்ளேன் என்று தெரியும் என்றும் தான் எங்கு இருக்கிறேன் என்று தெரியிவில்லை என்றும் தான் பின்புறம் இருப்பவர் பார்த்தேன் அவர் போலீஸ்காரர் என்று தெரியும் என்றும் தனது தாத்தா செத்துட்டார் என்றும் சொத்துக்காக சண்டைபோட்டு கத்தியால் வெட்டினார்கள் என்றும் தடியும் கத்தியும் எடுத்து வந்தார்கள் என்றும் எதற்கு வந்துள்ளேன் என்று தனக்கு தெரியாது என்றும் தான் சில விவரங்களை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன் என்றும் இந்த இடம் கோர்ட் என்றும் யாரும் தன்னிடம் சொல்லவில்லை என்றும் தனக்கும் தெரியாது என்றும் கோர்ட் என்றால் தனக்கு எதுவும் தெரியாது என்றும் தமிழ் எழுத படிக்க தெரியாது என்றும் வெட்டு பட்டவர்களை செஞ்சி ஆஸ்பித்திரியில் சேர்த்தார்கள் என்றும் தனது தாத்தாவை பாண்டிச்சேரியில் கொண்டு போய் சேர்த்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவருக்கு இளவயது காரணமாக போதிய விவரம் தெரியவில்லை என்று அவரது சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

7.6). அ.சா.6-ஆக விசாரிக்கப்பட்ட தணிகாசலம் என்பவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 சக்திவேல், அ.சா.2 மாரியம்மாள் ஆகியோரை தெரியும் என்றும், எதிரிகளை தெரியும் என்றும், 1/2 ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் மாலை 6.00 மணியளவில் எங்கள் ஊர் விநாயகர் கோவில் பொதுப்பணத்தை குப்பன் மருமகன் ஏலத்திற்கு கேட்டார் என்றும், அதற்கு ஊர்காரர்கள் குப்பன் மருமகன் வெளியூர்காரர் என்பதால் ஏலம் கொடுக்க மறுத்துவிட்டனர் என்றும் அதற்கு எதிரி குப்பனின் தந்தை ராமன் தான் பாண்டு எழுதிக்கொடுக்கிறேன் என்றும் பணத்தை தாருங்கள் என்று சொன்னார் என்றும், அவர் பாண்டு எழுதிக்கொடுத்து பணத்தை பெற்றுக் கொண்டார் என்றும், குப்பனுக்கும், ராமனுக்கும் சக்திவேல் வீட்டில் ஒருவருக்கொருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்றும், கோவிலின் அருகில் சம்பவம் மட்டுமே தெரியும் என்றும், வீட்டில் நடந்த சம்பவம் தெரியாது என்றும், ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டார்கள் என்றும், ராமனுக்கு அடிபட்டது என்றும், அவரை செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், சக்திவேலுக்கு தலையிலும், சக்திவேலின் மகளுக்கு காலில் அடிபட்டது என்றும், அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள் என்றும் சக்திவேலின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கும் இந்த சண்டையில் காயம் ஏற்பட்டது என்றும், அவர்கள் ஆஸ்பத்திரிக்கு செல்லவில்லை என்றும், மறுநாள் காலை வளத்தி போலிசார் விசாரணை செய்தனர் என்றும், மறுநாள் தான் வீட்டிற்கு சென்று பார்த்த போது வீட்டில் ரத்த கறை படிந்திருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.7). அ.சா.7-ஆக விசாரிக்கப்பட்ட சேகர் என்பவர் தனது சாட்சியத்தில், அ.சா.1

சக்திவேல், அ.சா.2 மாரியம்மாள் ஆகியோரை தெரியும் என்றும், எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 சக்திவேலுக்கும், ஆஜர் எதிரி குப்பனுக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 7.00 அல்லது 8.00 மணி அளவில் அவரது கழனியில் சம்பவம் நடந்தது என்றும் எதிரி குப்பன் நிலத்தில் ஏறு ஓட்டினார் அவரது தந்தை ராமன் என்பவர் தடுத்தார் என்றும், அங்கு கழனியில் பிரச்சனை நடந்தது என்றும், அடித்துக் கொண்டார் என்றும், மறுநாள் இரவு 8.00 மணியளவில் அ.சா.1 சக்திவேல் வீட்டில் இருந்த போது எதிரிகள் கும்பலாக சென்று குப்பன் தடியால் சக்திவேல் அவரது தகப்பனார் அவரது மனைவி, மகன் ஆகியோரை அடித்ததாக சொன்னார் என்றும், எதிரிகள் அடித்துவிட்டு சென்று விட்டார்கள் என்றும், பின்னர் காயம்பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், தன்னை போலிசார் சம்பவ காலத்தில் விசாரிக்கவில்லை என்றும், தன்னை பாண்டி ஜிப்மர் மருத்துவமனையில் போலிசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.8). அ.சா.8-ஆக விசாரிக்கப்பட்ட காண்டீபன் என்பவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 சக்திவேல், அ.சா.2 மாரியம்மாள் ஆகியோரை தெரியும் என்றும், எதிரிகளை தெரியும் என்றும் அ.சா.1 சக்திவேலுக்கும், எதிரி குப்பனுக்கும் ஏற்கனவே சொத்து தகராறு இருந்து வந்தது என்றும், 09.06.2016 ம் தேதி மாலை 5.30 லிருந்து 6.00 மணிக்குள் சம்பவம் நடந்தது என்றும், சம்பவதினத்திற்கு 3 நாள் முன்பு கூட்டம் போட்டார்கள் என்றும், கோவில் பணத்தில் குப்பன் ரூ.3,000/- வாங்கி உள்ளதாக சொன்னார்கள் என்றும், அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ராமன் தான் கையெழுத்து

இட்டிருந்தார் என்றும், அதனை ராமனிடம் கேட்டபோது ராமன் குப்பன் குடும்பத்தாரிடம் கேட்குமாறும் தான் தேவைப்பட்டால் பணத்தை திருப்பி தான் கொடுத்துவிடுவதாக சொன்னார் என்றும், ஊர்க்காரர்கள் குப்பனிடம் பணம் கேட்டதற்கு தான் வாங்கவில்லை என்றும் தான் கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார் என்றும், அதன் பின்னர் ஊர்காரர்கள் மீண்டும் ராமனிடம் கேட்ட போது அதன்பின்னர் அவர்கள் சென்ற பின்னர் சக்திவேல் வீட்டிற்கு குப்பன் அவரது மகன் மலர், அவரது மனைவி ஆகியோர் வந்தனர் என்றும், குப்பன் கையில் கொடுவா கத்தி வைத்திருந்தார் என்று வாய்சண்டை செய்துவிட்டும், கொலை மிரட்டல் செய்துவிட்டும் சென்று விட்டார்கள் என்றும் அதன் பின்னர் 3 நாள் கழித்து 09.06.2016 அன்று மாலை 5.30 முதல் 6.00 மணிக்குள் குப்பன், கஸ்தூரி, மலர், அவரது மருமகன், மகன் ஆகியோர் கும்பலாக சென்று சக்திவேலின் வீட்டிற்கு வந்து தாக்கினார்கள் என்றும், குப்பன் கையில் கத்தி வைத்திருந்தார் என்றும், அவரது மருமகன் கையில் துடுப்பு வைத்திருந்தார் என்றும் குப்பனின் மகன் கட்டை வைத்திருந்தார் என்றும், தான் அந்த வழியாக வந்த போது சம்பவத்தை கேட்டு தான் அங்கேயிருந்தேன் என்றும், சத்தம் கேட்டு தான் சக்திவேல் வீட்டிற்கு சென்றேன் என்றும், அப்போது எதிரி கஸ்தூரி இங்கே வந்தால் உன்னையும் வெட்டி விடுவேன் என்று சொன்னார் என்றும், பிறகு தனது அண்ணன் அவரிடமும் காயம்பட்டவரின் அருகில் சென்றால் உங்களையும் வெட்டிவிடுவேன் என்று சொன்னார் என்றும் அதன் பின்னர் தாங்கள் உள்ளே சென்று பார்த்தோம் என்றும், தானும், தனது அண்ணன் கோகுல் கிருஷ்ணன், இருவரும் சக்திவேல் வீட்டிற்கு சென்று

பார்த்தோம் என்றும் அங்கு ராமன் மூச்சு விட முடியாமல் சற்று மயக்க நிலையில் இருந்தார் என்றும், பிறகு தான் தனது மொபைல் போன் மூலம் ஆம்புலன்சுக்கு போன் செய்ததாகவும், பிறகு ஊர் தலைவர், கவுன்சிலர் ஆகியோருக்கு தகவல் தெரிவித்தேன் என்றும், அதன்பிறகு காயம்பட்டவரை தாங்கள் செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், போலிசார் அன்றைய இரவு விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.9). அ.சா.9-ஆக விசாரிக்கப்பட்ட சிதம்பரம் என்பவர் தனது சாட்சியத்தில், தான் கோழிப்பண்ணை வைத்துள்ளதாகவும், தற்சமயம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்தும், அதுபோலவே ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்தும் தன்னுடையது தான் என்றும், 2 வது கையெழுத்து மண்ணாங்கட்டி என்பவர் போட்டுள்ளார் என்றும், அவர் தங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றும் தனக்கு தெரிந்தவர் என்றும், மகசரிலும், 2 வது கையெழுத்து மண்ணாங்கட்டிதான் போட்டுள்ளார் என்றும், சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு காலையில் 8.00 மணியளவில் குப்பனையும் அவரது மருமகன் முருகனையும், வளத்தி போலிசார் செஞ்சி டு சேத்பட்டு சாலையில் களவாய் கூட்ரோட்டில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது போலிசார் தன்னிடம் குப்பனையும், அவரது மருமகனையும் தெரியுமா என்றார்கள் தெரியும் என்றேன் என்றும், அவர்களிடமிருந்து கத்தியையும், தடியையும் அரஸ்ட் செய்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக கையெழுத்து இடுமாறு சொன்னார்கள் அதற்கு தான் கையெழுத்திட்டேன் என்றும், குப்பனும், அவரது மருமகனும் போலிசாரிடம் எதுவும்

சொல்லவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருள் கத்தியும், கட்டையும் தான் குப்பனிடமும் அவரது மருமகனிடமிருந்தும் கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.10). அ.சா.10-ஆக விசாரிக்கப்பட்ட மணிபாலன் என்பவர் தனது சாட்சியத்தில், சுமார் ஒரு வருடத்திற்கு மேல் ஒரு நாள் இரவு 8.00 அல்லது 8.30 மணி அளவில் சம்பவம் நடந்தது என்றும், பொது ஜனங்கள் சத்தம் இட்டுக் கொண்டு சென்றதால் தானும் சென்றேன் என்றும், தான் குடியிருக்கும் நெகனூர் பஞ்சாயத்து உள்ள புதூரில் ரோடுக்கு அருகில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும், அ.சா.1, 2 ஆகியோர் ஊருக்குள் குடியிருந்து வருகிறார்கள் என்றும், தான் குடியிருக்கும் இடத்தில் ஜனங்கள் சத்தம் இட்டுக் கொண்டு சண்டை நடந்த இடமான ஊருக்குள் கூத்தாடி மேடைக்கு அருகில் சென்றார்கள் என்றும், தானும் அங்கு சென்றேன் என்றும், தான் போய் சேர்ந்த போது எல்லோரும் செஞ்சிக்கு சென்று விட்டார்கள் என்றும் யார், யாரை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தான் கேள்விப்படவும் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.11). அ.சா.11-ஆக விசாரிக்கப்பட்ட கோகுல்ராஜ் என்பவர் தனது சாட்சியத்தில், தான் சம்பவ சமயத்தில் விவசாய கூலி வேலை செய்து வந்தேன் என்றும், தற்சமயம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியில் இருக்கிறேன் என்றும், அ.சா.1 சக்திவேல், அ.சா.2 மாரியம்மாள் ஆகியோரை தெரியும் என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் எதிரிகளுக்கும், அ.சா.1 சக்திவேலுக்கும் நிலம்

சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றும், 09.06.2016 அன்று இரவு 9.00 மணியளவில் எதிரி குப்பன் வீட்டிற்கு ஊர் முக்கியஸ்தர்கள் சென்று கோவில் பணம் ரூ.3,000/- கேட்டார்கள் என்றும், அதற்கு எதிரி குப்பன் தான் கோவில் பணம் வாங்கவில்லை என்று மறுத்துவிட்டார் என்றும், அதன் பின்னிட்டு ஊர் பொதுமக்கள் ராமனிடம் சென்று கேட்டார்கள் என்றும் அதற்கு ராமன் அந்த கோவில் பணத்தை தான் தந்து விடுவதாக கூறினார் என்றும் அதன் பின்னர் எதிரி குப்பனும், குப்பன் மனைவி கஸ்தூரியும் சென்று வாய் தகராறு செய்தனர் என்றும், மறுநாள் 10.06.2016 ம் தேதி தான் தன் வீட்டில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரிகள் அனைவரும் சக்திவேல் வீட்டிற்கு சென்றார்கள் என்றும், அங்கு இரைச்சல் கேட்டது என்றும், அதன்பின்னர் தானும், தங்கள் ஊர் மக்கள் அனைவரும் வந்தார்கள் என்றும், கஸ்தூரியும், மலர்விழியும் தங்களை பார்த்து தங்களுக்கு என்ன வேலை என்று திட்டினார்கள் என்றும் உங்கள் வீட்டிற்கு வந்தால் தான் நீங்கள் கேட்க வேண்டும் என்றும் சக்திவேலின் வீட்டிற்கு தாங்கள் செல்வதை கேட்க முடியாது என்று தான் சென்னேன் என்றும், சக்திவேல் வீட்டிலேயே முருகன், ஞானமூர்த்தி ஆகியோர் முகத்தையும், கைகாலையும் கழுவினார்கள் என்றும், தாங்கள் சென்ற போது வெட்டியதால் வீடு முழுவதும் ரத்தமாக இருந்தது என்றும், ராமன் என்பவருக்கு தோள்பட்டையிலும் நெஞ்சிலும் காயம் இருந்தது என்றும் பின்னர் ஆம்புலன்ஸ் வந்தது என்றும் ஊர் மக்கள் வந்தார்கள் என்றும், சம்பவத்தை பார்த்தார்கள் என்றும், ஆம்புலன்சில் காயம் பட்ட சக்திவேல், மாரியம்மாள், ராமன், சங்கரி, கலைமணி குண சுந்தரி ஆகியோரை கொண்டு சென்றார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

7.12). அ.சா.12-ஆக விசாரிக்கப்பட்ட மண்ணாங்கட்டி என்பவர் தனது சாட்சியத்தில், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு தான் வளத்தி காவல் நிலையத்திற்கு கோவில் திருவிழாவிற்கு அனுமதி வாங்க சென்றிருந்ததாகவும், தானும், தன் ஊரைச் சேர்ந்த சிதம்பரமும் சென்றிருந்தோம் என்றும், அப்போது போலிசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் அப்போது வேறு யாரையும் விசாரித்தார்களா என்றால் இல்லை என்றும் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது கையெழுத்து தன்னுடையது தான் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.4 ஆகும் என்றும் முதலில் கையெழுத்து போட்டது சிதம்பரம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.13). அ.சா.13-ஆக விசாரிக்கப்பட்ட ருக்மணி என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும், சாட்சிகளையும் தெரியும் என்றும், சக்திவேல், ராமன் ஆகியோரை தெரியும் என்றும் அவர்கள் இருவரும் தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்தான் என்றும், தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், தான் காலையில் ஆடு ஓட்டி சென்று விட்டு மாலையில் தான் வீடு திரும்புவேன் என்றும் தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.14). அ.சா.14-ஆக விசாரிக்கப்பட்ட சங்கர் என்பவர் தனது சாட்சியத்தில், தான் டிரைவராக பணிபுரிந்து வருவதாகவும், எதிரிகளை தெரியும், சாட்சிகளையும் தெரியும் என்றும், சக்திவேல் ராமன் ஆகியோரை தெரியும் என்றும், அவர்கள் இருவரும்

தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் தான் என்றும், தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் தன்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.15). அ.சா.15-ஆக விசாரிக்கப்பட்ட குமார் என்பவர் தனது சாட்சியத்தில், பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், முதலில் உள்ள கையெழுத்து ஆங்கிலத்தில் இருப்பதால் யாருடைய கையெழுத்த என்பது தனக்கு தெரியாது என்றும், 10.06.2016 அன்று இரவு 10.30 மணியளவில் தான் செஞ்சியிலிருந்து வீட்டிற்கு சென்ற போது தங்கள் ஊர் கூத்துமேடை அருகே ஏதோ பிரச்சனை நடந்தது தொடர்பாக போலிசார் தன்னிடம் கையெழுத்தை வாங்கினார்கள் என்றும், அந்த இடத்தை பார்த்து ஏதோ எழுதினார் என்றும், அதில் தான் கையெழுத்து போட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.16). அ.சா.16-ஆக விசாரிக்கப்பட்ட வெற்றிவேல் என்பவர் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், மற்றொரு கையெழுத்து தங்கள் ஊரை சேர்ந்த குமார் என்பவரின் கையெழுத்து என்றும், இந்த கையெழுத்து சுமார் 10.06.2016 அன்று தான் தன் கொல்லையில் இருந்து தன் வீட்டிற்கு இரவு 10 மணிக்கு மேல் வந்து கொண்டிருக்கும் போது அப்போது வளத்தி போலிசார் தன்னை கையெழுத்து போடும்படி கேட்டார் என்றும், ஒரு வரைபடம் வந்ததாகவும் அதில் கையெழுத்து போடும்படி கேட்டார் என்றும், அந்த பகுதியில் இந்த சம்பவம் நடந்ததாகவும் அதை

பார்வையிட்டதாக போலிசார் தன்னிடம் கூறி கையெழுத்து கேட்டார் போலிசார் தன்னை விசாரித்தார் என்றும், அவ்வாறு தான் கையெழுத்து இட்டது தங்கள் ஊரில் உள்ள கூத்து மேடை அருகில் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.17). அ.சா.17-ஆக விசாரிக்கப்பட்ட உத்திரகுமார் தனது சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும், அ.சா.1 சக்திவேல், ராமன், மாரியம்மாள் ஆகியோரையும் தனக்கு தெரியும் என்றும், தேதி, மாதம் தெரியாது என்றும் சுமார் 3 வருடத்திற்கு முன்பு செஞ்சியில் இருந்தேன் என்றும் சம்பவம் தனக்கு நேரடியாக தெரியாது கேள்விபட்டது தான் என்றும், அ.சா.2 அடிபட்டதாக தான் கேள்விபட்டேன் என்றும், அவருக்கு காயம் அடைந்து போய் பார்த்தேன் என்றும், ஆனால் அவ்வாறு அடிபட்டது என்பது தெரியாது என்றும், ராமனின் பெரிய மகன் குப்பன் ராமனை தாக்கியதாக தான் கேள்விபட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.18). அ.சா.18-ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் முத்துவேல் என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 ம் தேதி செஞ்சி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 7.30 மணிக்கு ராமன் வயது 75 த/பெ. அயோத்தியராமன், நெகனூர் புதூர், செஞ்சி வட்டம் என்பவர் அவர்களை தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் கத்தி ஆகியவற்றால் இரவு 06.30 மணிக்கு தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 6x2x1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம், இடது பக்கம் முகத்தில் வீக்க காயம் காணப்பட்டது என்றும், 2 கண்களிலும் வீக்கம் காணப்பட்டது என்றும், மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி

வைத்ததாகவும், பின் 18.06.2016 ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு இடது தோள் பட்டையில் எலும்பு முறிவு ஆகிய காயங்கள் இருந்தது என்றும், காயங்கள் கொடுங்காயங்கள் என்று தான் சான்று வழங்கியதாகவும், ராமனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் தான் 18.06.2016 ம் தேதி வழங்கிய காயச்சான்று என்றும், அதே தேதி இரவு 8.05 மணிக்கு சக்திவேல், த/பெ. ராமன், வயது 46, நெகனூர் புதூர் என்பவர் தன்னை தெரிந்த நபர் 6 பேர்கள் தடி மற்றும் கத்தி ஆகியவற்றால் இரவு 6.30 மணிக்கு தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 4x3x2 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்ததாகவும் பின் 18.06.2016 ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு தலையில் 4x3x2 அளவு கிழிந்த காயமும், இடது மணிக்கட்டில், 3x2 காயங்கள் சொற்ப காயம் என்றும் தான் சான்று வழங்கினேன் என்றும், சக்திவேல் த/பெ. ராமனுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றும், அன்றையதினமே இரவு 8.20 மணிக்கு மாரியம்மாள் க/பெ.சக்திவேல் வயது 46 நெகனூர் புதூர். செஞ்சி வட்டம் அவர்களை தெரிந்த நபர் 4 பேர்கள் தடி மற்றும் கத்தி ஆகியவற்றால் 10.06.2016 ம் தேதி இரவு தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்ததில் காயம்பட்ட நபருக்கு 4x3x1 செ.மீ இடது காலில் கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்தேன் ஏன்றும் பின் 18.06.2016 ம் தேதி ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து காயம்பட்ட நபருக்கு தலையில் 4x3x1 அளவு இடது காலில் கிழிந்த

காயம் இருந்தது என்றும், மாரியம்மாள், க/பெ. சக்திவேல் ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றும், 10.06.2016 ம் தேதி இரவு 8.00 மணிக்கு சங்கரி, த/பெ. சக்திவேல் வயது 18 நெகனூர் புதூர் என்பவர் தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் கத்தி ஆகியவற்றால் 10.06.2016 ம் சுமார் 6.30 மணிக்கு தாக்கியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்ததில் நெற்றியில் ஆழ்ந்த கிழிந்த காயம்பட்ட நபருக்கு 3x2x1 செ.மீ இருந்தது என்றும், சங்கரிக்கு ஏற்பட்ட காயங்கங்கள் சொற்பகாயம் என்றும், 10.06.2016 ம் தேதி 8.00 மணிக்கு குணசுந்தரி த/பெ. சக்திவேல் வயது 12, நெகனூர் புதூர் செஞ்சி வட்டம் என்பவர் தன்னை தெரிந்த நபர் 3 பேர்கள் கட்டை மற்றும் சுத்தி ஆகியவற்றால் தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்ததில் தலையில் இரத்த கட்டு இருந்தது என்றும், மேற்படி நபரை மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் குணசுந்தரிக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என்றும், 10.06.2016 ம் தேதி இரவு 8.10 மணிக்கு கலைமணி, த/பெ. சக்திவேல் வயது 16 என்பவர் தன்னை தெரிந்த நபர் 5 பேர்கள் கத்தி, தடி, மற்றும் மிளகாய் பொடி ஆகியவற்றால் தாக்கியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்ததில் தலையில் 3x2x1 செ.மீ. கிழிந்த காயம், வலது தோள்பட்டையில் வலி இருந்ததாக கூறினார் என்றும், மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட நபரை அனுப்பி வைத்ததாகவும், கலைமணிக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.19). அ.சா.19-ஆக விசாரிக்கப்பட்ட பார்வதி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2016 ம் தேதி வளத்தி காவல் நிலையத்தில் 2 ம் நிலை காவலராக பணியில்

இருந்த போது வளத்தி காவல் நிலைய குற்ற எண்.156/16 சட்ட பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307 @ 302 வழக்கில் இறந்து போன ராமன், த/பெ. அயோத்தி கவுண்டர் நெகனூர் புதூர் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் உத்தரவின்படி ஜிப்மர் மருத்துவமனைக்கு சேர்த்தேன் என்றும், பகல் 12.00 மணி முதல் 14.00 வரை பிரேத விசானைக்கு உடனிருந்ததாகவும், பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு பின் பிரேதத்தை உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்ததாகவும், பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள் உறுப்புகளை ஆய்வு செய்ய வேண்டி கொடுக்கப்பட்ட சீல் இட்ட கடிதத்தை உள்ளுறுப்புகள் அடங்கிய பாட்டிலுடன் விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்ததாகவும், ஒப்புதல் பெற்று நிலையம் வந்த அறிக்கை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.20). அ.சா.20-ஆக விசாரிக்கப்பட்ட செந்தில் என்பவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 முதல் 5 வரையானவர்களையும் ராமன் என்பவரையும் தனக்கு தெரியும் என்றும் எதிரிகளையும் தனக்கு தெரியும் என்றும் அடித்துக்கொண்டார்கள் என்று சொன்னார்கள் என்றும், யார் யார் அடித்துக் கொண்டார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், யார் யாருக்கு என்ன நடந்தது என்றும் என்ன காயம்பட்டது என்றும் தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.21). அ.சா.21-ஆக விசாரிக்கப்பட்ட பவுனம்மாள் என்பவர் தனது சாட்சியத்தில்,

ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் இறந்துபோன ராமன் தனது கணவர் என்றும், தனது கணவர் உடல்நலம் சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும், பிரச்சனையை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.22). அ.சா.22-ஆக விசாரிக்கப்பட்ட சகாதேவன் என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், 11.06.2016 ம் தேதி தான் பெங்களூரில் இருந்தேன் என்றும், தான் சம்பவ தேதியில் ஊரில் இல்லை என்றும், பெங்களூரில் தான் இருந்தேன் என்றும் போலிசார் சம்பவம் குறித்து தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தனது சித்தப்பா சொல்லி கேள்விபட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.23). அ.சா.23-ஆக விசாரிக்கப்பட்ட மகாலிங்கம் என்பவர் தனது சாட்சியத்தில், தங்கள் ஊரை சேர்ந்த அ.சா.1 சக்திவேல் என்பவரை தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி குப்பன் என்பவரை மட்டும் தெரியும் என்றும், மற்றவர்களை தெரியாது என்றும், அ.சா.1 சக்திவேல் என்பவர் கொடுத்த புகார் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.1ற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனையை பற்றி தனக்கு தெரியாது என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையானவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், போலிசார் வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.24). அ.சா.24-ஆக விசாரிக்கப்பட்ட கல்யாணராமன் என்பவர் தனது சாட்சியத்தில் தங்கள் ஊரைச் சேர்ந்த அ.சா.1 சக்திவேல், ராமன், மாரியம்மாள், செல்வி, கலைமணி ஆகியோரை தெரியும் என்றும், அவர்கள் தனது தூரத்து உறவினர்கள் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் அவர்கள் தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், சுமார் 2 ,3 வருடங்களுக்கு முன்பு மாலை 4 லிருந்து 5 மணிக்குள் நான் செஞ்சியில் இருந்து வீட்டிற்கு சென்ற போது ராமன் வீட்டருகே சத்தம் கேட்டது என்றும், தான் சென்று பார்க்கவில்லை என்றும், ராமன் சக்திவேல் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருந்தது என்றும், பின்னர் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், வெளியூர் ஆட்கள் வந்து அவர்களை அடித்துவிட்டதாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.25). அ.சா.25-ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் சஞ்சய் சுகுமார் என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது ஜிப்மர் மருத்துவமனையில் பேராசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 28.06.2016 ம் தேதி ஜிப்மர் மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வந்ததாகவும், அன்றையதினம் வளத்தி காவல் ஆய்வாளர் குற்ற எண்.156/2016 வழக்கில் சம்பந்தப்பட்ட ராமன், த/பெ. அயோத்தி கவுண்டர் வயது 74 என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டி கொடுத்த வேண்டுதல் கடிதத்தின் பேரில் மேற்படி பிரேதத்தை காவலர் 2214 டி.பார்வதி என்பவர் அடையாளம் காண்பித்ததன் பேரில் பிரேதபரிசோதனை 2.15 மணிக்கு ஆரம்பித்து 3.15 மணிக்கு முடித்ததாகவும், தான் மேற்படி பிரேதத்தை ஆய்வு செய்ததில் பிரேத விரைப்புத்

தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது என்றும், வெளிபுற காயங்கள் 1. இடது பக்க மண்டையோடு தோளின் மேல்புறத்தில் 7cm x 3cm எலும்பு ஆழத்திற்கு கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், தாடையின் மேல் 4cm x 3 cm அளவில் கன்ரிய காயம் காணப்பட்டது என்றும், இடது பக்க மணிகட்டில் 4cm x 4cm அளவில் கன்ரிய காயம் காணப்பட்டது என்றும், உட்புற 2 எலும்பு முறிந்து காணப்பட்டது என்றும், உட்புற சோதனையில் இடதுபக்க மண்டையோடு மேல்புறத்தில் இரத்தம் கசிந்து காணப்பட்டது என்றும், மண்டையோடு, மூளை, மூச்சுகுழல் நாவடி எலும்பு முழுமையாக காணப்பட்டது என்றும், இதயத்தில் இடதுபக்க 2 cm அளவில் தசை தடிமனாக காணப்பட்டது என்றும், நுரையீரல் உப்பிய நிலையில் காணப்பட்டது என்றும், நுரையீரல் உட்புறத்தில் சீழ் கலந்த நுரை காணப்பட்டது என்றும், 2 சிறுநீரகத்தின் வெளிபுறத்திலும், உட்புறத்திலும் சீழ் காணப்பட்டது என்றும் வயிற்றில் 50 மிலி காவி நிற திரவம் காணப்பட்டது என்றும், வயிற்றின் உட்புறத்தில் அசாதாரனமான வாசனை எதுவும் காணப்படவில்லை என்றும், குடலில் மலம் காணப்பட்டது என்றும், சிறுநீரக பையில் சீழ் காணப்பட்டது என்றும் இரசாயன பரிசோதனை செய்வதற்கு உடல் உறுப்புகளின் பகுதிகளான வயிற்றில் உடல் உறுப்பு பகுதி, 500 கிராம் கல்லீரல், சிறுநீரகம் 1 பகுதி, இரத்தம் 30 மிலி, மற்றும் இரத்தம் தோய்த்த பஞ்சு ஆகியவை அனுப்பப்பட்டது என்றும், பின்னர் பகுப்பாய்வு அறிக்கை 09.07.2016 ல் பெற்றேன் என்றும் அதன் அடிப்படையிலும், உடல்கூராய்வு அடிப்படையிலும் தான் இறுதி அறிக்கை 05.08.2016 அன்று கொடுத்தேன் என்றும், மேற்படி ராமன் என்பவருக்கு சிறுநீரகத்தில் ஏற்பட்ட சீழ் மற்றும் நோயினால்

(speticemia as a complication of Pynoprosis) இறந்ததாக தன்னுடைய இறுதி அறிக்கையில் தெரிவித்ததாகவும், மேற்படி ராமனுக்கு மனு அருந்தியதாலோ, விஷம் அருந்தியதாலோ இறப்பு ஏற்படவில்லை என்றும், தான் பிரேத பரிசோதனை செய்து அளித்த பிரேத விசாரணை அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தன்னிடம் காண்பிக்கப்படுவதுதான் என்றும், மேற்படி உள்ளுறுப்புகளை ஆய்வு செய்து கொடுத்த பகுப்பாய்வு அறிக்கை தன்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.26). அ.சா.26-ஆக விசாரிக்கப்பட்ட மகாலட்சுமி என்பவர் தனது சாட்சியத்தில், சம்பவத்தை பற்றி தான் கடலிபுத்தூரில் தன் வீட்டில் இருந்த போது தன் தங்கை கலைமணி என்பவர் தனக்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்றும், தான் தன் தந்தை வீட்டிற்கு வந்து பார்த்த போது அனைவரும் காயம்பட்டு இருந்தார்கள் என்றும், சேகர், காண்டீபன், கோகுல கிருஷ்ணன் ஆகியோர் காயம் பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், தான் தன் தந்தையிடமும், தங்கைகளிடமும் சம்பவத்தை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.27). அ.சா.27-ஆக விசாரிக்கப்பட்ட ராஜீவ் என்பவர் தனது சாட்சியத்தில், தான் விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 29.06.2016 அன்று பணியில் இருந்த போது வளத்தி காவல் நிலைய குற்ற எண்.156/2016 என்ற வழக்கில் இறந்து போன ராமன் வயது 74,

என்பவரது உடல் உறுப்புகள், மருத்துவ அலுவலர் ஜிப்மர் மருத்துவமனை புதுச்சேரி என்பவரிடம் இருந்து பெண் காவலர் 2214 திருமதி.பார்வதி என்பவர் மூலமாக மூடி முத்திரையிடப்பட்ட குப்பிகளில் ஆய்வகத்தில் பெறப்பட்டது என்றும், அவை 1). இரைப்பை மற்றும் குடல் 2). கல்லீரல் மற்றும் சிறுநீரகம், 3). இரத்தம் 4). பாதுகாப்பு திரவம் இவை அனைத்தையும் பகுப்பாய்வு செய்ததில் ஆல்கஹால் மற்றும் நச்சுப் பொருட்கள் எதுவும் இல்லை என்று கண்டறியப்பட்டது என்றும், இதற்கான அறிக்கை எண்.VPMT ox.H 887/2016 ஆகும் என்றும் 08.07.2016 தன்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை தான் தான் வழங்கியது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.28). அ.சா.28-ஆக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் குமார் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 ம் தேதி மாலை வளத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று இரவு 8.30 மணிக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்த சகதிவேல், த/பெ. ராமன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் இரவு 9.30 மணிக்கு வளத்தி காவல் நிலையம் வந்து குற்ற எண்.156/2016 பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 307 இ.த.ச. படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் முதல் தகவல் அறிக்கையும், புகார் வாக்குமூலத்தையும் மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.29). அ.சா.29 -ஆக விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் பழினி என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 10.06.2016 ம் தேதி வளத்திகாவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது வளத்தி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் என்பவர், வளத்தி காவல் நிலைய குற்ற எண்.156/2016 பிரிவுகள் 147, 148, 448, 294(b), 323. 324. 307 இ.த.சபடி வழக்கு பதிவு செய்ததாகவும், தன் பார்வைக்காக வைத்தார் என்றும், அதை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றையதினமே சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் வெற்றிவேல், குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வையிட்டு மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சிகள் சக்திவேல், சங்கரி, மாரியம்மா, ராமன், கலைமணி,தணிகாசலம், சேகர், காண்டீபன் கோகுல்ராஜ், வெற்றிவேல் மற்றும் குமார் ஆகியோர் தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 11.06.2016 அன்று தனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரி குப்பன் மற்றும் முருகன் ஆகியோரை செல்லபிராட்டி கே.எஸ்.ராஜா ஆடவர் கல்லூரி அருகில் காலை 4 மணிக்கு கைது செய்ததாகவும், பின்னர் எதிரி குப்பன் என்பவர் தாமாக முன் வந்து கொடுத்த வாக்குமூலத்தை சாட்சிகள் சிதம்பரம் மற்றும் மண்ணாங்கட்டி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் சுமார் 6 மணிக்கு எதிரி வீட்டின் பின்புறம் இருந்து எதிரி குப்பன் எடுத்து ஆஜர் செய்த இரும்பு கைப்பிடி போட்ட சுமார் 48 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றையும், சுமார் 79.5 செ.மீ நீளமுள்ள மரதுடுப்பு ஒன்றையும், மேற்படி சாட்சிகள் சிதம்பரம், மண்ணாங்கட்டி ஆகியோர்

முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்னர் சாட்சிகள் சிதம்பரம், மண்ணாங்கட்டி, ருக்குமணி, சங்கர், மகாலிங்கம், கல்யாணராமன், சகாதேவன், செந்தி, உத்தரகுமார் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தான் கைப்பற்றிய மேற்படி சான்று பொருட்களை பார்ம்.95 மூலம் செஞ்சி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு 24.11.2016 அன்று அனுப்பி வைத்ததாகவும், 28.06.2016 அன்று புகார்தாரர் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தன் தந்தை 27.06.2016 அன்று 19.45 மணிக்கு இறந்துவிட்டதாக தகவல் சொன்னவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் மாரியம்மாள், சங்கரி, கலைமணி, பவுனம்மாள் மற்றும் குணசுந்தரி ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் பிரிவினை 147, 148, 448, 294(b), 323, 324, 307, 302 இ.த.ச. ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்ததாகவும், அன்றையதினமே ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று 12 மணி முதல் 14 மணி வரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் இறந்த ராமன் உடலின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னர் இறப்பின் காரணத்தை அறியும் பொருட்டு பெண் காவலர் பார்வதி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் பிரேத பரிசோதனைக்கு ஏற்பாடு செய்ததாகவும், பின்னர் 06.08.2016 அன்று ராஜி, விழுப்புரம் தடய அறிவியல் அதிகாரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் கொடுத்த உள்ளுறுப்பு அறிப்பையை பெற்றதாகவும், பின்னர் 28.06.2016 அன்று சாட்சிகள் 1 முதல் 5

வரையானவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முத்துவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய காய சான்றுகளை பெற்றதாகவும், பின்னர் ராஜீவ்காந்தி மருத்துவமனை மருத்துவர் நிரஞ்சனா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய மருத்துவ சான்றை பெற்றதாகவும், பின்னர் வழக்கிறல் இறந்த ராமன் என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சஞ்ஜெய்சுகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய சடல கூராய்வு அறிக்கையை பெற்றதாகவும், பின்னர் 19.10.2016 அன்று பிரேத கூராய்வு செய்த மருத்துவர் சஞ்ஜெய்சுகுமார் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றதாகவும், பின்னர் 22.10.2016 அன்று பெண் காவலர் 2216 பார்வதி, குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் மற்ற எதிரிகள் பிரகாஷ், கஸ்தூரி, மலர்விழி ஆகியோர் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும் பின்னர் வழக்கு புலன் விசாரணை முடித்து குற்ற வழக்கு இயக்குனர் விழுப்புரம் அவர்களிடம் இருந்து கருத்துரை பெற்று எதிரிகள் மீது 147, 148, 449, 294(b), 323, 324, 307,341, 506 (ii), 149, IPC படி இறுதி அறிக்கை 22.10.2016 அன்று தாக்கல் செய்தததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சிய சங்கதிகள் குறித்து குவிமுச.பிரிவு 313(1)(அ)-ன்படி எதிரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து வினவியபோது, பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள்

உள்ளனர் என்று கூறி பின் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9) இவ்வழக்கில் 1ம் எதிரி மீது 148, 448, 294(b), 307(3 counts). 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 2ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 324 (2 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 4ம் எதிரி மீது 148, 448, 294(b), 307 உ/இ 149, 323 (3 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 5ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 506 (ii) இதச பிரிவுகள் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே நாம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

<u>தீர்வு</u> :

10) அரசு தரப்பு தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இவ்வழக்கில் 1ம் எதிரி மீது 148, 448, 294(b), 307(3 counts) 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 2ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 324 (2 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 4ம் எதிரி மீது 148, 448, 294(b), 307 உ/இ 149, 323 (3 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 5ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 506 (ii) இதச பிரிவுகள் கீழும், குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது, ஆகவே இவ்வழக்கின் 1, 2, 4 மற்றும் 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

11) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

<u>11.1)அரசு தரப்பின் வாதம்</u>

அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் தன் வாதத்தில் அரசுத் தரப்பு சாட்சிகள் வழக்குச் சம்பவம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், ஆகவே, எதிரிகள் மீதான இவ்வழக்கின் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் ஆகவே, இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

11.2) எதிரிகள் தரப்பு வாதம்

எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வழக்குச் சம்பவம் குறித்து சாட்சியமளித்துள்ள சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்றும் எதிரிகளின் மீதான இவ்வழக்கின் குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், ஆகவே எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

12. எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் குறித்து பரிசீலனை

12.1). இறுதி அறிக்கை சங்கதிகள்: புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபரான சக்திவேல் என்பவருக்கு மற்றொரு காயம்பட்ட நபரான ராமன் தகப்பனார் ஆவார் மற்றும் சாட்சி மாரியம்மாள் மனைவியும், சாட்சிகள் சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோர் மகள்களும் ஆவார்கள். 1வது எதிரியான குப்பன் புகார்தாரர் சக்திவேலின் அண்ணன் ஆவார். 1வது எதிரிக்கு 2 வது எதிரி மகனும், 3 வது எதிரி

மனைவியும், 4 வது எதிரி மகளும் மற்றும் 5 வது எதிரி மருமகனும் ஆவார்கள். மேற்படி ராமன் தனது பொதுக்குடும்ப சொத்துக்களான 7 ஏக்கர் நிலத்தை 1வது எதிரிக்கும், புகார்தாரர் சக்திவேலுவிற்கும் தலா 3 ஏக்கர் பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டு தன் பங்காக 1 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு தன் இளைய மகனான புகார்தாரர் சக்திவேலுவின் பராமரிப்பில் தன் மனைவியான சாட்சி பவுனம்மாளுடன் வசித்து வந்தார் என்றும், இந்நிலையில் 1வது எதிரி தனக்கு ஒதுக்கப்பட்ட பாக நிலத்தில் கல்லாங்குத்து உள்ளதால் ராமனின் 1 ஏக்கர் பாக நிலத்தை கேட்டு பிரச்சனைகள் செய்தும், ராமன் சக்திவேலுவின் பராமரிப்பில் உள்ளதால் அவர் மீது 1வது எதிரி குடும்பத்தினர் விரோதத்துடன் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் கடந்த 2015 ம் வருடம் ஆடி மாதம் ஊர் பிள்ளையார் கோவில் சீட்டுபணம் ரூ.3,000/-த்தை ராமன் எடுத்த போது 1வது எதிரி அந்த தொகையை தன் குடும்ப செலவிற்காக அவரிடம் கேட்டு வாங்கியதாகவும், அதை 1வது எதிரி திருப்பி செலுத்தாததால் 09.06.2016 அன்று ஊர் பஞ்சாயத்தார் ராமனிடம் இது குறித்து கேட்டதால் ராமன் 1வது எதிரியிடம் இதை கேட்ட போது "சீட்டை நீதானே எடுத்தாய் நீயே கட்டிக்கொள்" என்று அவர் கூறவே இருவருக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டுள்ளது என்றும், இதன் தொடர்ச்சியாக மறுநாள் 10.06.2016 அன்று மாலை 5.00 மணியளவில் ராமன் புகார்தாரரான சக்திவேலின் வீட்டில் தனது மனைவி பவுனம்மாள், மகன் சக்திவேல், மருமகள் மாரியம்மாள், பேத்திகள் சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோருடன் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது 1 முதல் 5 எதிரிகள் சட்ட விரோத கலக கும்பலாக சக்திவேலின் வீட்டிற்குள் 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல்

வழியாகவும், 2, 3,4 எதிரிகள் பின்வாசல் வழியாகவும் அத்து மீறி நுழைந்தார்கள் என்றும், அதை பார்த்த ராமன் " ஏண்டா இங்க வறீங்க எதுவா இருந்தாலும் அப்புறமா பேசிக்கலாம்" என்று கூறிய போது அவரை கொலை செய்யும் நோக்கில் 5 வது எதிரி "தெவிடியாபையா என் மாமனாரை ஏமாத்தவாட பாக்கற தெவிடியா பையா இத்தோடு ஒழிந்து போடா " என்று கொடுவா கத்தியால் தலையிலும், வலுபக்க மார்பிலும் வெட்டியதாகவும், மறிக்க வந்த புகார்தாரர் சக்திவேலுவை 1வது எதிரி அந்த கொடுவாகத்தியை பிடுங்கி கொலை செய்யும் நோக்கில் "இத்தோடு செத்து போடா" என்று சொல்லி தலையில் வெட்டியதாகவும், அப்பொழுது 2, 3, 4 எதிரிகள் "தெவிடியாபையா நாராகூதிகளா" என அசிங்கமாக திட்டியும் 2 வது எதிரி துடுப்பால் ராமனின் வாய் மற்றும் இடது தோள்பட்டை, இடது முழங்கை, இடது முன்கை ஆகிய இடங்களில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், தடுத்த சாட்சி மாரியம்மாளின் உடம்பு மற்றும் கணுக்காலில் தாக்கியும், சாட்சிகள் சங்கரி, கலைமணி மற்றும் குணசுந்தரி ஆகியோரின் தலை முடியை பிடித்து 3 மற்றும் 4 எதிரிகள் கையாலும், காலாலும் தாக்கியுள்ளனர் என்றும் மேலும் அவர்களை கொலை செய்யும் நோக்கில் 1வது எதிரி கொடுவா கத்தியால் சாட்சி கலைமணியின் முன் நெற்றியிலும், குண சுந்தரியின் தலையிலும் வெட்டியதாகவும், 2 வது எதிரி அந்த கொடுவா கத்தியை பிடிங்கி சாட்சி சங்கரியின் தலையில் கொலை செய்யும் நோக்கோடு வெட்டியதாகவும், பின் 1 முதல் 5 வரையான எதிரிகள் காயமுற்ற மேற்படி சாட்சிகளை பார்த்து "சொத்தை ஏமாற்றி வாங்கிவிட்டு எங்களை ஊரில் ஏளனமாடா பேசிறீங்க தேவிடியாபசங்க" என்று அசிங்கமாக திட்டி கையாலும், காலாலும் தாக்கி சக்திவேல்,

மாரியம்மாள், சங்கரி, கலைவாணி மற்றும் குணசுந்தரி ஆகியோருக்கு சொற்பகாயங்கள் விளைவித்துள்ளனர் என்றும் எனவே 1வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 307 (3 எண்ணிக்கை), 506(ii) -ன்கீழும், 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 324, 307, 506(ii) -ன் கீழம் 3, 4 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 449, 294(b), 341, 323, 506(ii) - 307 உ/இ 149-ன்படியும், 5 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(b), 307 , 506(ii) -ன்கீழும் தண்டிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டு அரசு தரப்பில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12.2). இவ்வழக்கில் காயமுற்ற ராமன் முதலில் 10.06.2016 அன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றும் பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் 14.06.2016 அன்று டிஸ்சார்ஜ் ஆகியுள்ளதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து செஞ்சி அரசு மருத்துவமனை மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளதாகவும், இந்நிலையில் மேற்படி ராமன் 24.06.2016 அன்று பகல் 12.00 மணிக்கு உடல் நலக்குறைவு காரணமாக மகாத்மா காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து வாயில் ஏற்பட்டிருந்த காயம் மற்றும் கட்டுப்பாடில்லா சர்க்கரை நோய் காரணமாக மாலை 5.00 மணிக்கு ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு 27.06.2016 அன்று 07.45 மணியளவில் இறந்துள்ளதாகவும் அவரது உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அவர் இறப்பானது கிட்னியில் நோய் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டும், அதனால் அவரது ரத்தம் நஞ்சானதால் ஏற்பட்ட

பிரச்சனை காரணமாக (Septicaemia as complication of pyonephrosis) இறப்பு ஏற்பட்டது என்றும் வழக்கு சம்பவத்தால் ஏற்பட்டதாக கூறப்படும் காயங்களால் இறப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் அவரது தலையில் ஏற்பட்டுள்ள காயம் தலையின் மண்டையோடு மற்றும் மூளையில் காயம் எதையும் விளைவிக்காததால் எதிரிகள் தாக்கியதன் விளைவாக மேற்படி ராமனுக்கு இறப்பு ஏற்படவில்லை என்று மருத்துவர் கருத்துரை வழங்கியதாக குறிப்பிட்டு மேற்கண்ட பிரிவுகளின் கீழ் மட்டும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் 1 முதல் 5 எதிரிகள் மீது கடந்த 02.08.2017 தேதியில் இ.த.ச.பிரிவுகள் 148, 449, 294(பி), 307 (3 எண்ணிக்கை), 506(ii) குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு எதிரிகளுக்கு விளக்கிக் கூறி வினவி அவர்கள் மறுத்ததன் அடிப்படையில் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு பின் வழக்கு வாதுரைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்கண்ட குற்றச்சாட்டுகளில் பிழை இருந்தது கண்டு 27.02.2026 அன்று கு.வி.மு.ச. பிரிவு 216 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் மாற்றி வனைய இந்நீதிமன்றம் முடிவெடுத்த நிலையில் 3ம் எதிரி கடந்த 07.10.2024 தேதியில் இறந்து விட்டதாக அவரது இறப்புச் சான்று தாக்கல் செய்யப்பட்டு அவர் மீதான குற்றம் அற்றுப்போய்விட்டதாக கடந்த 08.11.2024 அன்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளதால், 1ம் எதிரி மீது 148, 448, 294(b), 307(3 counts). 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 2ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 324 (2 counts), 506 (ii) இதச பிரிவுகள் கீழும், 4ம் எதிரி மீது 148, 448, 294(b), 307 உ/இ 149, 323 (3 counts), 506 (ii)

இதச பிரிவுகள் கீழும், 5 ம் எதிரி மீது 148, 448, 294(b), 307, 506 (ii) இதச பிரிவுகள் கீழும் குற்றச்சாட்டுகள் திருத்தி வனையப்பட்டு எதிரிகளுக்கு விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் மறுத்தனர். மேலும் குற்றச் சாட்டுக்கள் மேற்கண்டவாறு மாற்றி வனையப்பட்டதால் வழக்கு விசாரணையின் போது பதியப்பட்ட சாட்சியங்களில் தமக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றும் மேற்கொண்டு தமது தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரிக்கத் தேவையில்லை என்றும் அரசு மற்றும் எதிரிகள் ஆகிய இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டு அரசுத் தரப்பில் 27.02.2026 அன்றே குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டும் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே பதியப்பட்ட சாட்சியங்கள் இந்நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

12.3) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் புகார்தாரரான அ.சா.1 சக்திவேல் தன்னுடைய சாட்சியத்தில், 2016 ம் ஆண்டு மாதம் நினைவில்லை என்றும் 24 ம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் தான் தனது வீட்டில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது தனது மகள்களும் சாட்சி மாரியம்மாளும் படித்துக் கொண்டிருந்தனர் என்றும், அப்போது 1 மற்றும் 2 ம் எதிரிகள் வீட்டின் முன்புறமாகவும் 3 முதல் 5 எதிரிகள் வீட்டின் பின் புறமாகவும் வந்து 1 , 2 எதிரிகள் கொடுவாளால் தனது அப்பா ராமனை தோள்பட்டையிலும், உதட்டிலும் வெட்டியதில் வெட்டுக் காயம் ஏற்பட்டது என்றும், தனது மகள்கள் சங்கரி, குணசுந்தரி, கலைவாணி ஆகியோரை 3 முதல் 5 எதிரிகள் வெட்டியதாகவும், அதில் சங்கரியின் நெற்றியில் வெட்டியதாகவும், கலைமணியை தலையின் உச்சியில்

வெட்டியதாகவும் தன்னை 1ம் எதிரி நெற்றியில் கொடுவா கத்தியால் வெட்டியதாகவும், " என் பாட்டன் சொத்தை நீ ஏமாற்ற பார்க்கிறாயாடா " இத்தோடு ஒழிந்து போடா" என்று சொல்லி 1ம் எதிரியும், 2 ம் எதிரியும் தன்னை வெட்டியதாகவும், தனது மனைவி சாட்சி மாரியம்மாளை எதிரிகள் அனைவரும் துடுப்பு பட்டையால் முதுகிலும் இடது கால் முட்டிக்கு கீழும் அடித்ததாகவும் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் தங்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு வைத்து போலிசார் தன்னிடம் விவரங்கள் கேட்டு புகாரில் எழுதி தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், பின் தன்னையும், தன் அப்பா ராமனையும் மட்டும் மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்து 3 நாட்கள் சிகிச்சை எடுத்து பின் பாண்டிச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், மற்ற சாட்சிகள் சங்கரி கலைவாணி, குணசுந்தரி மற்றும் மாரியம்மாள் ஆகியோர் செஞ்சி அரசு மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்றதாகவும், சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கொடுவாள், மர துடுப்பு ஆகிய ஆயுதங்களை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12.4) காயம்பட்ட நபரான அ.சா.2 மாரியம்மாள் தன்னுடைய சாட்சியத்தில் சொத்து மற்றும் பணம் திருப்பி செலுத்தும் பிரச்சனை தொடர்பான முன் விரோதம் காரணமாக 10.06.2016 அன்று மாலை 5.00 மணியளவில் தாங்கள் வீட்டில் டி.வி.பார்த்துக் கொண்டிருந்த போது 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல் வழியாகவும், 2

முதல் 4 எதிரிகள் பின் வாசல் வழியாகவும் வந்ததாகவும் அவர்கள் கையில் கத்தி, கொடுவாள் ஆயுதம் வைத்திருந்ததாகவும் 1 மற்றும் 5 எதிரிகள் ராமனை கொடுவா கத்தியால் வெட்டியதாகவும், 2 முதல் 4 எதிரிகள் தன்னையும் சாட்சி சக்திவேலையும் கத்தி, கொடுவாள், மரத்துடுப்பு ஆகியவற்றால் அடித்ததாகவும், தன்னை முதுகில் தடியால் அடித்து இடது கால் முட்டிக்கு கீழ் வெட்டிவிட்டதாகவும் தன் மகள்கள் சங்கரி, கலைமணி, குணசுந்தரி ஆகியோரின் மண்டையில் வெட்டுக்காயம் ஏற்படுத்தியதாகவும் பிறகு அருகில் இருந்தவர்கள் தங்களை ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் அங்கு வைத்து போலிசார் தன்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12.5). மற்றொரு காயம்பட்ட நபரான அ.சா.3 சங்கரி தன்னுடைய சாட்சியத்தில் 10.06.2016 அன்று மாலை 5.00 மணியளவில் தாங்கள் வீட்டில் இருந்த போது 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல் வழியாகவும், 2 முதல் 4 எதிரிகள் பின் வாசல் வழியாகவும் வந்ததாகவும் 1 மற்றும் 5 எதிரிகள் ராமனை கொடுவா கத்தியால் மண்டையிலும், வலது மார்பிலும் வெட்டியதாகவும், தடுக்கச் சென்ற தனது அப்பா சாட்சி சக்திவேலை 1ம் எதிரி 5ம் எதிரி கையிலிருந்த கொடுவாவை வாங்கி மண்டையில் வெட்டியதாகவும், தனது அம்மா சாட்சி மாரியம்மாள் அருகில் சென்ற போது 2ம் எதிரி அவரது முதுகில் அடித்து காலில் வெட்டியதாகவும் 3 மற்றும் 4 எதிரிகள் தன்னையும், தன் தங்கைகளையும் முடியைபிடித்து அடித்து கலைமணி மற்றும் குணசுந்தரி மண்டையில் வெட்டுக் காயம் ஏற்படுத்தியதாகவும், 1வது எதிரி தன் மண்டையில்

வெட்டுக் காயம் ஏற்படுத்தியதாகவும் அசிங்கமாக திட்டி இத்தோடு செத்துப்போடா என்று சொல்லி தன் அப்பாவை அடித்தார்கள் என்றும், பிறகு அருகில் இருந்தவர்கள் தங்களை ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் அங்கு வைத்து போலிசார் தன்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12.6). மற்றொரு காயம்பட்ட நபரான அ.சா.4 தன்னுடைய சாட்சியத்தில், 10.06.2016 அன்று மாலை 5.00 மணியளவில் தாங்கள் வீட்டில் டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல் வழியாகவும், 2 முதல் 4 எதிரிகள் பின் வாசல் வழியாகவும் வந்ததாகவும் 1 மற்றும் 5 எதிரிகள் ராமனை கொடுவா கத்தியால் வாயிலும், தோள்பட்டையிலும் 5ம் எதிரி வெட்டியதாகவும், 1ம் எதிரி தலையில் வெட்டியதாகவும் தடுக்கச் சென்ற தனது அப்பா சாட்சி சக்திவேலை 1ம் எதிரி 2ம் எதிரி சேர்ந்து தலையில் வெட்டியதாகவும், தனது அம்மா சாட்சி மாரியம்மாளை 1ம் எதிரி முதுகில் கட்டையால் அடித்து பின் காலில் வெட்டியதாகவும், 2 முதல் 4 எதிரிகள் தன்னையும், தன் சகோதரிகளையும் முடியைபிடித்து அடித்து 1வது எதிரி தன்னையும், குணசுந்தரியையும் தலையில் வெட்டியதாகவும், 5 வது எதிரி சங்கரியை நெற்றியில் வெட்டியதாகவும் உங்களை உயிரோடு விடுவதில்லை என்று 3, 4 எதிரிகள் சொன்னதாகவும், பிறகு அருகில் இருந்தவர்கள் தங்களை ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் அங்கு வைத்து போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12.7). மற்றொரு காயம்பட்ட நபரான அ.சா.5 குணசுந்தரி வயது 13 என்பவர் நீதிமன்றம் ஆஜராகி கடந்த 02.08.2017 அன்று முதல் விசாரணை செய்யப்படுகையில் அவருக்கு போதிய விவரங்கள் எதுவும் தெரியவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி அவரது சாட்சியம் பதிவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். அவரது மேற்கண்ட முதல்விசாரணை சாட்சியத்தில் சொத்துக்காக சண்டை போட்டு கத்தியால் வெட்டினார்கள் என்றும் தடியும் கத்தியும் எடுத்து வந்தார்கள் என்றும், சொல்லியுள்ள போதிலும் துரதிஷ்டவசமாக அவரது சாட்சியம் முழுமையாக பதிவு செய்யப்படாமலும் அவரை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படாமலும் உள்ள நிலையில் அவரது மேற்கண்ட சாட்சியம் இந்நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

12.8). தனிநபர் சாட்சியான அ.சா.6 தன்னுடைய சாட்சியத்தில் 1 அல்லது 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலை 6.00 மணியளவில் கோவில் பொதுப்பணத்தை 1ம் எதிரியின் மருமகன் ஏலத்திற்கு கேட்டதற்கு அவர் வெளியூர்காரர் என்பதால் மறுக்கப்படவே 1ம் எதிரியின் தந்தை ராமன் பாண்டு எழுதிக் கொடுத்து அந்த பணத்தை பெற்றுக் கொண்டதாகவும், பின் 1ம் எதிரிக்கும் ராமனுக்கும் இடையே புகார்தாரர் சக்திவேல் வீட்டில் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், தனக்கு கோவில் அருகே நடந்த சம்பவம் மட்டுமே தெரியும் என்றும், வீட்டில் நடந்த சம்பவம் தெரியாது என்றும், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதில் ராமனுக்கு அடிபட்டது என்றும் சக்திவேலுக்கு தலையிலும் அவரது மகளுக்கு

காலிலும் அடிபட்டது என்றும் தன்னை மறுநாள் காலை போலிசார் விசாரணை செய்த போது நடந்த சம்பவத்தை சொன்னேன் என்றும், மறுநாள் காலை தான் வீட்டிற்கு சென்று பார்த்த போது அங்கு ரத்தக்கறை படிந்திருந்தது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12.9). மற்றொரு தனிநபர் சாட்சியான அ.சா.7 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரிக்கும் அவரது தந்தை ராமனுக்கும் நிலத்தகராறு இருந்ததாகவும், 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு 8 மணியளவில் சாட்சி சக்திவேல் வீட்டிலிருந்த போது எதிரிகள் அவர்களை அடித்துவிட்டு சென்றுவிட்டதாக கேள்விபட்டதாகவும், பின்னர் காயம்பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12.10). மற்றொரு தனிநபர் சாட்சியான அ.சா.8 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரிக்கும் ராமனுக்கும் இடையே கோவில் பணத்தை வாங்கியது தொடர்பாக பிரச்சனை இருந்தது என்றும், சொத்து தகராறும் இருந்தது என்றும், இந்நிலையில் 09.06.2016 அன்று மாலை 5.30 மணி முதல் 6.00 க்குள் 1 முதல் 5 எதிரிகள் புகார்தாரர் சக்திவேலின் வீட்டிற்கு வந்து தாக்கியதாகவும், 1ம் எதிரி கையில் கத்தி வைத்திருந்ததாகவும், 2ம் எதிரி கட்டை வைத்திருந்ததாகவும் , அந்த வழியாக தான் வந்த போது சம்பவத்தை கேட்டு அங்கேயே இருந்ததாகவும் தான் சத்தம் கேட்டு வீட்டிற்குள் சென்ற போது 3வது எதிரி இங்கு வந்தால் உன்னையும் வெட்டிவிடுவேன் என்று சொன்னதாகவும் எனினும் தானும், தனது அண்ணன்

அ.சா.11ம், உள்ளே சென்று பார்த்த போது ராமன் மூச்சு விட முடியாமல் மயக்க நிலையில் இருந்ததாகவும், பின் தான் ஆம்புலன்சுக்கு போன் செய்து ஊர் தலைவர், கவுன்சிலருக்கு தகவல் தெரிவித்து காயம்பட்டவரை செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் குறிப்பிட்டு முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ள நிலையில் குறுக்கு விசாரணையிலும் அவரது மேற்கண்ட சாட்சியம் தெளிவாகவே இருப்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12.11). ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.9 தன்னுடைய சாட்சியத்தில் சுமார் 1 1/2 ஆண்டுகளுககு முன்பு காலை 8.00 மணியளவில் 1மற்றும் 5 எதிரிகளை செஞ்சி - சேத்பட் சாலையில் கலவாய் கூட்ரோட்டில் போலிசார் விசாரித்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது அவர்களிடமிருந்து ச.பொ.1 கத்தியையும், சா.பொ.2 தடியையும் கைப்பற்றியதாகவும் அதற்காக தானும் மண்ணாங்கட்டி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும் தன் முன்னிலையில் 1, 5 எதிரிகள் போலிசாரிடம் எதுவும் சொல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்டவாறு கைப்பற்றுதல் மகசர் அடிப்படையில் 1, 5 எதிரிகளிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது குறித்து மட்டும் அ.சா.9 முதல் விசாரணையில் தெளிவாக சாட்சியம் அளித்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. இந்நிலையில் குறுக்கு விசாரணையின் போது அ.சா.9 அ.சா.1ன் சம்மந்தி என்று சாட்சியம் அளித்துள்ள போதும் அவர் அ.சா.1ன் உறவினர் என்பதால் மட்டும் அவரது சாட்சியத்தை முழுவதுமாக ஒதுக்கிவிட இயலாது என்றே

இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.12) அ.சா.10 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

12.13) அ.சா.11 தன்னுடைய சாட்சியத்தில் அ.சா.8 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.12 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்துமட்டும் தன்னுடையது என்றும், காவல் நிலையம் சென்ற போது அங்கு வைத்து தன்னிடம் அந்த கையெழுத்தை போலிசார் வாங்கியதாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

12.14). அ.சா.13, அ.சா.14 ஆகியோர் தம்முடைய சாட்சியத்தில் தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

12.15). பார்வை மகசர் சாட்சியான அ.சா.15 தன்னுடைய சாட்சியத்தில் போலிசார் கடந்த 10.06.2016 அன்று இரவு 10.30 மணியளவில் தங்கள் ஊரில் கூத்து மேடை அருகே இடத்தை பார்த்து எழுதினார்கள் என்றும் அதில் தான் கையெழுத்து போட்டேன் என்றும், அதில் என்ன எழுதப்பட்டது என்று தனக்கு தெரியாது

என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.16 தன்னுடைய சாட்சியத்தில் போலிசார் கடந்த 10.06.2016 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் தமது வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது வரைபடம் வரைந்து அந்த பகுதியில் சம்பவம் நடந்ததாகவும், அதை பார்வையிட்டதாகவும் கூறி தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்து அவரது சாட்சியத்தின் மூலமாக பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவரே தனது குறுக்கு விசாரணையில் அதில் என்ன எழுதப்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12.16). அ.சா.17 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

12.17). மருத்துவரான அ.சா.18 தன்னுடைய சாட்சியத்தில் தான் செஞ்சி அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த போது, காயம்பட்ட ராமன், சக்திவேல், மாரியம்மாள், சங்கரி, குணசுந்தரி, கலைமணி ஆகியோர் கடந்த 10.06.2016 அன்று இரவு 8.00 மணியளவில் தன்னிடம் சிகிச்சைக்கு வந்தது குறித்தும், அவர்களுக்கு ஏற்பட்டிருந்த காயங்களின் தன்மை குறித்தும் சாட்சியம் அளித்து ராமனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கப்பட்ட காயச்சான்று மீண்டும் தவறுதலாக அ.சா.ஆ.5 ஆகவும் சக்திவேலுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம்

என்று வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், மாரியம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் சங்கரிக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும், குணசுந்தரிக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும் கலைமணிக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.18 யை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது ராமன், குணசுந்தரி, சங்கரி ஆகியோர் தம்மை 3 நபர்கள் தாக்கியதாகவும், சக்திவேல், மாரியம்மாள், கலைமணி ஆகியோர் தம்மை 6 பேர் தாக்கியதாகவும் சிகிச்சைக்கு சேரும் போது குறிப்பிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து பரிசீலிக்கையில் அரசு தரப்பு சாட்சியங்களில் சொல்லப்படுவது போல் பலர் சேர்ந்து தாக்கியதாக சொல்லப்படும் சம்பவத்தில் காயம்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு சேரும் போது பதட்டத்தில் கும்பலாக தாக்கியவர்களின் எண்ணிக்கையை மாறுபட்டு குறிப்பிடுவது இயல்பானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.18). காவலரான அ.சா.19 தனது சாட்சியத்தில் வழக்கில் காயம்பட்ட ராமன் பின்னிட்டு இறந்த நிலையில் அவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு பின் உறவினர்களிடம் ஒப்படைத்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

12.19). அ.சா.20 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ்

சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1ன் தாயாரான அ.சா.21 தன்னுடைய சாட்சியத்தில் தனது கணவர் ராமன் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும், தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

12.20). அ.சா.22 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ தேதியில் தான் ஊரில் இல்லை என்றும், தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.23 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.24 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ தினத்தன்று தான் தன் வீட்டிற்கு சென்ற போது ராமன் வீட்டருகே சத்தம் கேட்டது என்றும் தான் சென்று பார்க்கவில்லை என்றும் ராமன் சக்திவேல் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருந்தது என்றும் பின்னர் அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12.21). மருத்துவரான அ.சா.25 இவ்வழக்கில் கண்ட ராமனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தது குறித்தும், அவருக்கு சிறுநீரகத்தில் ஏற்பட்ட சீழ் மற்றும் நோயினால் இறந்ததாக கருத்துரை வழங்கியதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்து

ராமனின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அ.சா.25 ன் சாட்சியத்தில் ராமன் என்ற பெயர் தவறுதலாக ரவி என்று தட்டச்சு பிழை ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட அ.சா.ஆ.11 பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்து போன ராமன் "Septicaemia as complication of pyonephrosis" அதாவது சிறுநீரகத்தில் சீழ் தேங்கும் நிலையால் ரத்தத்தில் தொற்று ஏற்பட்டு இறந்து போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

12.22). அ.சா.26 தன்னுடைய சாட்சியத்தில் தான் அ.சா.1 ன் மகள் என்றும், வழக்கு சம்பவம் குறித்தும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவரே தனது குறுக்கு விசாரணையின் போது சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் அவர் வழக்கு சம்பவத்திற்கு கேள்வி நிலை சாட்சி மட்டுமே என்பது தெளிவாகிறது.

12.23). தடய அறிவியல் நிபுணராக அ.சா.27 தன்னுடைய சாட்சியத்தில், தான் வழக்கில் கண்ட ராமனின் பிரேதத்தில் இருந்த உள்ளுறுப்புகளை ஆய்வு செய்து அ.சா.ஆ.12 கருத்துரை வழங்கியது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளரான அ.சா.28 தன்னுடைய சாட்சியத்தில், அ.சா.1 இடம் மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்று அ.சா.ஆ.13 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.28 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது இவ்வழக்கின் 1வது எதிரியான குப்பன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் தான் வளத்தி காவல் நிலைய குற்ற எண்157/2016 ஆக

முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக ஒப்புக் கொண்டு அந்த முதல் தகவல் அறிக்கையின் ஒளி நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12.24). விசாரணை அதிகாரியான அ.சா.29 தன்னுடைய சாட்சியத்தில் வழக்கு விசாரணை குறித்தும் 10.06.2016 அன்று சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் வெற்றிவேல், குமார் முன்னிலையில் மாதிரி வரைபடம், அ.சா.ஆ.14, பார்வை மகசர் அ.சா.ஆ.15 தயார் செய்தது குறித்தும், 1வது எதிரி குப்பனிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலம் பற்றியும், எதிரி வீட்டின் பின்புறம் இருந்து 1ம் எதிரி குப்பன் எடுத்து ஆஜர் செய்த கத்தி, மரதுடுப்பு ஆகியவை சாட்சிகள் சிதம்பரம், மண்ணாங்கட்டி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி மகசர் அ.சா.ஆ.17 தயார் செய்தது பற்றியும், படிவம்-95 அ.சா.ஆ.18 தயார் செய்தது குறித்தும், இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இ.த.ச.147, 148, 448, 294(b), 323, 324, 307, 302 ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தது குறித்தும், இறந்த ராமனின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.20 பெற்றது குறித்தும், மருத்துவ சான்று அ.சா.ஆ.21 பெற்றது குறித்தும் பின் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12.25). மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளான அ.சா.10, அ.சா.12, அ.சா.13, அ.சா.14, அ.சா.17, அ.சா.20, அ.சா.21, அ.சா.22, அ.சா.23, ஆகியோர் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள

போதும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் சம்பவத்தன்று மாலை 5.00 மணியளவில் தாங்கள் வீட்டில் டி.வி.பார்த்துக் கொண்டிருந்த போது 1 மற்றும் 5 எதிரிகள் முன் வாசல் வழியாகவும், 2 முதல் 4 எதிரிகள் பின் வாசல் வழியாகவும் கையில் கத்தி, கொடுவாள் ஆயுதத்துடன் கலகக் கும்பலாக அத்துமீறி நுழைந்ததாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளனர். மேற்கண்ட சாட்சியங்கள் 1, 2, 4 மற்றும் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 148, 448 ஆகியவற்றின் உட்கூறுகளை ஈர்க்கும் விதமாக அமைந்துள்ளன. இந்நிலையில் அ.சா.1 முதல் 4 வரையானோர் தங்கள் சாட்சியத்தில் எந்த எதிரி யாரைத் தாக்கினார் என்பதை சிறு முரண்பாடுகளுடன் குறிப்பிட்டிருந்தாலும் பதட்டமான குற்றச் சம்பவ சூழலில் அவ்வாறு கவனமுடன் பார்த்து சாட்சியமளிக்க வேண்டும் என எதிர் பார்க்க முடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 1, 2, 4 மற்றும் 5 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 307 ன் கீழான குற்றச் சாட்டு குறித்து அ.சா.2 மற்றும் 3 ஆகியோர் சரியாக 5 வது எதிரி ராமனை கொடுவா கத்தியால் தலை மற்றும் மார்பில் தாக்கியதாகவும், அ.சா.1,3, மற்றும் 4 ஆகியோர் சரியாக 1 வது எதிரி அ.சா.1,4 மற்றும் 5 ஆகியோரை கொடுவா கத்தியால் தலையில் தாக்கியதாகவும், அ.சா.2 சரியாக 2 வது எதிரி அ.சா3 ஐ கொடுவா கத்தியால் தலையில் தாக்கியதாகவும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளனர். மேலும் அ.சா.18 மருத்துவரின் சாட்சியத்தின் வாயிலாக அ.சா.1,3 முதல் 5 வரையானோருக்கு தலையிலும் நெற்றியிலும் மற்றும் ராமனுக்கு தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டிருந்தது உறுதியாகிறது. மேலும் மேற்கண்ட சம்பவத்தின் போது ஆயுதம் ஏந்திய கலகக்

கும்பலில் 4 வது எதிரியும் ஒருவராக இருந்தது மேற்கண்ட அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் உறுதியாகிறது. எனவே மேற்கண்ட சாட்சியங்கள் 1,2,5 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 307 மற்றும் 4 வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 307 உ.இ. 149 பிரிவின் உட்கூறுகளை ஈர்க்கும் விதமாக அமைந்துள்ளன என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.26) அ.சா.18 மருத்துவர் அ.சா.1,3 முதல் 5 வரையானோருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று கூறியிருந்தாலும், அவை தலையில் ஏற்பட்டுள்ளதை பார்க்கும் போதும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையானோரின் சாட்சியத்தில், எதிரிகள் தங்களை தாக்கும் போது இத்தோடு செத்து போ என்று சொல்லி தாக்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும் போதும், எதிரிகள் மரணத்தை ஏற்படுத்த போதுமான கருத்துடன் கொடுவா கத்தியால் வெட்டி காயம் ஏற்படுத்தியது தெரிய வருகிறது. ஆகவே, எதிரிகளின் செயல் பிரிவு 307 இ.த.ச-ன்படியான உட்கூறுகளின் கீழ் பொருந்துவதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.1 முதல் 4 வரையானோர் எதிரிகள் கொடுவா கத்தியால் தாக்கியதாக தெளிவாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர்களிடம் வழக்கு சொத்துக்கள் அடையாளம் காட்டப்பட்டு குறியீடு செய்யப்படாமல் தவறுதலாக விடுபட்டு கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.9 மூலம் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள போதும் இச்சங்கதி மேற்கண்டவாறு அ.சா.1 முதல் 4 வரையானோரின் சட்சியம் ஆயுதம் குறித்து தெளிவாக உள்ள நிலையில் அவர்களது சாட்சியத்திற்கு பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம்

கருதுகின்றது.

12.27) இதேபோல் அ.சா.2 தனது சாட்சியத்தில் 2 முதல் 4 எதிரிகள் தன்னை கனுக்காலுக்கு கீழ் வெட்டிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட அவரது சாட்சியம் 2ம் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவு 324 இ.த.ச.ன் கீழான குற்றச்சாட்டின் உட்கூறுகளின் கீழ் பொருந்துவதாக உள்ளது. இந்நிலையில் அ.சா.2 சற்று மிகைப்படுத்துதலுடன் 3, 4 எதிரிகளும் சேர்ந்து வெட்டியதாக குறிப்பிட்டுள்ளதை வைத்து அ.சா.2ன் சாட்சியத்தை ஐயப்பாட்டிற்குரியதாக ஒதுக்கிவிட இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மருத்துவரான அ.சா.18ன் சாட்சியத்தின்படி அ.ச.2க்கு கணுக்காலில் கிழிந்த காயம் இருந்துள்ளது மேற்கண்ட அ.சா.2ன் சாட்சியத்திற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்டவாறு அ.ச.2ன் சாட்சியம் தெளிவாக உள்ள நிலையிலும் அது மருத்துவ சாட்சியத்தால் ஒத்துரைக்கப்பட்டுள்ள நிலையிலும் வேறு எந்த ஒத்துரைக்கும் சாட்சியங்கள் இன்றியும் அ.சா.1ன் சாட்சியமே 2வது எதிரி மீதான இ.த.ச.பிரிவு 324ன்படியான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதேபோல், 2வது எதிரி மீதான மற்றொரு எண்ணிக்கையிலான இ.த.ச. பிரிவு 324ன்படியான குற்றச்சாட்டு குறித்து பரிசீலிக்கையில் அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 2 வது எதிரி தன் தந்தை ராமனை தோள்பட்டையில் தாக்கியதாக தெளிவாக குறிப்பிட்டுள்ளதும், மருத்துவரான அ.சா.18ன் சாட்சியத்தின்படி ராமனுக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு இருந்துள்ளதும், 2 வது எதிரி மீதான மற்றொரு எண்ணிக்கையிலான இ.,த.ச பிரிவு 324

ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிப்பதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12.28). மேலும், மற்ற சாட்சிகள் சிறிய முரண்பாடுகளுடன் சாட்சியம் அளித்திருந்தாலும் அ.சா.3 தனது சாட்சியத்தில் தெளிவாக தன்னையும், தனது சகோதரிகளையும், 3, 4 எதிரிகள் தலை முடியை பிடித்து அடித்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளது 4 வது எதிரி மீதான இ.,த.ச பிரிவு 323 (3 எண்ணிக்கை) ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிப்பதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

12.29). இந்நிலையில், மேற்கண்ட சாட்சிகள் முதல் விசாரணை செய்யப்பட்ட 02.08.2017 தேதியில் எதிரிகள் தரப்பில் அவர்களை குறுக்கு விசாரணை செய்யாமல் சாட்சியம் முடிக்கப்பட்டு பின் அ.சா.1 முதல் அ.சா.4 வரையானோரை கடந்த 04.03.2020 தேதியில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது அ.சா.1 புகாரை எல்லா சாட்சிகளிடமும் வாங்கினார்கள் என்றும், முதல் நாள் இரவு பேசி விட்டு சென்று மறுநாள் மாலை 6.00 மணியளவில் வந்து எதிரிகள் தாக்கியதாக சொல்லியுள்ள நிலையில் மேற்கண்ட சிறிய முரண்பாடு இயல்பானதே என்றும், அது அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோரின் சாட்சியம் குறுக்கு விசாரணையின் போதும் தெளிவாகவே உள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும், அ.சா.3 குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது சம்பவத்தின் போது அவர் 12ம் வகுப்பு படித்துக்

கொண்டிருந்ததாகவும் தன் அப்பாவும், தாத்தாவும் மருத்துவமனை சென்று வந்த விவரம் தான் பள்ளிக் கூடம் சென்று விட்டதால் தனக்கு நேரடியாக தெரியாது என்று குறிப்பிட்டு பின் தங்களுக்கு ஏற்பட்ட காயம் கிணற்றில் வெடி வைக்கும் போது கல் சிதறி ஏற்பட்டது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு சரியல்ல என்றும், எதிரிகள் தாக்கி ஏற்பட்டது என்றும், தெளிவாகவே சாட்சியம் அளித்துள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

12.30) இந்நிலையில் மேற்கண்ட அ.சா.1 முதல் 4 வரையானோர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களாக உள்ள சங்கதி அவர்களின் மேற்கண்ட தெளிவான சாட்சியத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்நிலையில் மற்றொரு பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.5 ன் வயது 13 என்பதாலும், அவருக்கு போதிய விவரங்கள் தெரியவில்லை என்பதாலும் துரதிருஷ்டவசமாக அவரது சாட்சியம் இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யாமல் விடப்பட்டுள்ளது. எனினும் மேற்கண்டவாறு அவரை தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.4 வரையான பாதிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் தெளிவாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.31). நேரில்கண்ட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.6 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு கோவில் அருகில் நடந்த சம்பவம் மட்டுமே தெரியும் என்றும் வீட்டில் நடந்த சம்பவம் குறித்து தெரியாது என்று தான் சம்பவத்திற்கு மறு நாள் தான் சம்பவ இடம் சென்று பார்த்ததாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள

நிலையில் அவர் வழக்கு சம்பவத்திற்கு கேள்வி நிலை சாட்சியம் மட்டுமே என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.7 ம் கேள்வி நிலை சாட்சியாகவே உள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. எனினும், மற்றொரு நேரில் கண்ட சாட்சியான அ.சா.8 சம்பவத்தன்று தான் சத்தம் கேட்டு அங்கே இருந்த போது 1 முதல் 5 எதிரிகள் மாலை 5.30 முதல் 6.00 மணிக்குள் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து தாக்கியதாகவும், அப்போது அ.சா.1 கையில் கத்தி வைத்திருந்ததாகவும் தங்களை அ.சா.1 ன் வீட்டிற்கு உள்ளே வர விடாமல் 3 வது எதிரி மிரட்டியதாகவும் பின் தானும், தனது அண்ணனாண அ.சா.11 ம் உள்ளே சென்று பார்த்த போது அங்கு அ.சா.1 ன் தந்தை ராமன் மயக்க நிலையில் இருந்ததாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவரது சாட்சியம் எதிரிகள் ஆயுதத்துடன் அ.சா.1 ன் வீட்டிற்குள் சென்றதற்கும் அதன் பின்னிட்டு சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டிருந்ததற்கும் சூழ்நிலை சாட்சியமாக தெளிவாக அமைந்துள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. இந்நிலையில் அவரது சாட்சியத்தில் சம்பவ தேதியாக 10.06.2016 க்கு பதிலாக தவறுதலா 09.06.2016 என்றும் அவரது அண்ணனான அ.சா.11 சிதம்பரம் மகன் கோகுல்ராஜ் என்பதற்கு பதிலாக கோகுலகிருஷ்ணன் என்று சிறிய தவறுகளுடன் குறிப்பிட்டுள்ளது அவரது சாட்சியத்தில் பெரும் ஐயத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.11 ன் சாட்சியமும் மேற்கண்ட

அ.சா.8 ன் சாட்சியத்தை ஒத்துரைக்கும் விதமாக தெளிவாக அமைந்துள்ளதை

இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12.32) இந்நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.9 தன் முன்னிலையில் போலிசாரிடம் 1 வது எதிரியும், 5 வது எதிரியும் எந்த விவரமும் சொல்லவில்லை என்று மறுத்துள்ள போதும் தன் முன்னிலையில் அ.சா.பொ.1 கத்தி மற்றும் அ.சா.பொ.2 கட்டை ஆகியவற்றை போலிசார் 1 மற்றும் 5 எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12.33) மேற்கண்டவாறு வழக்கு சம்பவம் மற்றும் எதிரிகளின் செய்கை குறித்து அ.சா.1 முதல் 4 வரையானோரின் சாட்சியம் தெளிவாக உள்ள நிலையிலும், அ.சா.8 மற்றும் அ.சா.11 ஆகியோரின் சாட்சியம் வழக்கு சம்பவ இடம் மற்றும் சூழ்நிலைகள் குறித்து தெளிவாக உள்ள நிலையிலும், பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.15 மற்றும் அ.சா.16 ஆகியோர் பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டது என்று தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளது வழக்கில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12.34). இந்நிலையில் அ.சா.28 உதவி ஆய்வாளர் அ.சா.1 உள்நோயாளியாக மருத்துவமனையில் இருந்த போது அவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அ.சா.ஆ.13 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் விசாரணை அதிகாரியான அ.சா.29 வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அ.சா.ஆ.14 மாதிரிவரைபடம் மற்றும் அ.சா.ஆ.15 பார்வை மகசர் தயார் செய்து குறித்தும் 1, 5

எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து வழக்கு சொத்துக்களை அ.சா.ஆ.17 கைப்பற்றுதல் மகசர் முன்னிலையில் கைப்பற்றியது குறித்தும் பின் சட்டபிரிவுகளை மாறுதல் செய்து அ.சா.ஆ.19 அறிக்கை தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

12.35). இந்நிலையில் அ.சா.28 ஐ குறுக்கு விசாரணை செய்த போது எதிரிகள் தரப்பில் இவ்வழக்கின் 1 வது எதிரி அளித்த புகார் அடிப்படையில் எ.சா.ஆ.1 குற்ற எதிர் வழக்கின் குற்ற எண்.157/2016 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எதிர் வழக்கு புகார் ஒன்று அளிக்கப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது தெரியவருகிறது. விசாரணை அதிகாரியான அ.சா.29 தனது குறுக்கு விசாரணையின் போது மேற்கண்ட எதிர்வழக்கு குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு ஆவணங்களை பார்த்தால் தான் பதில் சொல்ல முடியும் என்று மேம்போக்காக பதில் அளித்துள்ளார். மேற்கண்டவாறு அ.சா.28 ன் சாட்சியத்தில் இருந்து இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக குற்ற எதிர்வழக்கு பதியப்பட்டுள்ள நிலையில் காவல் நிலை ஆணை எண் 566 ன்படி இவ்வழக்கின் விசாரணை அதிகாரி இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது இது குறித்து முறையான விசாரணை நடத்தி எதிர் வழக்கு எதனால் முடிக்கப்பட்டது என்று தெளிவான விவரங்களை இவ்வழக்கில் சமர்பிக்க தவறியுள்ளார். இது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் " *T.Balaji and another -vs- The State*

*represented by Inspector of Police, New Washermenpet P.S. and another DOJ 08.08.2024…"* வழக்கின் முன் தீர்ப்பில் குறிப்பிட்ட முதல் வகையான வழக்குகளில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும் அந்த வழக்கின் எதிரிகள் தான் தாக்குதலை முன்னெடுத்தவர்கள் என்று தெளிவாக தெரியும் போது எதிர் வழக்கை முடித்து அறிக்கை தாக்கல் செய்து அசல் வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தி உள்ள நிலையில் இவ்வழக்கின் *விசாரணை அதிகாரி இந்த எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்த போது* அவ்வாறு எதிர் வழக்கை முடித்து இவ்வழக்கின் எதிரிகள் தான் தாக்குதலை முன்னெடுத்தவர்கள் என்று தெளிவாக குறிப்பிடவில்லை. எனினும் விசாரணை அதிகாரியால் இவ்வழக்கின் விசாரணையில் ஏற்பட்டுள்ள மேற்கண்ட தவறை மட்டும் கொண்டு மேலே விவாதிக்கப்பட்டவாறு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ள சங்கதிகளில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கருத இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிரிகள் தரப்பில் தமது புகார் மீது தங்கள் தரப்பில் சட்டப்பூர்வமான மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படவில்லை மற்றும் வழக்கு விசாரணையின் இறுதி நிலையின் போது வழக்கு பதிவு செய்த காவல் அதிகாரியை விசாரணை செய்தபோது தான் மேற்கண்ட கேள்வியே எழுப்பப்பட்டுள்ளது. எனவே, மேலே விவாதிக்கப் பட்டவாறு அ.சா.1 முதல் 4 மற்றும் அ.சா.8, 11 ஆகியோரின் ஐயப்பாட்டுக்குள்ளாகாத தெளிவான சாட்சியங்களின் அடிப்படையில் 1ம் எதிரி மீது 148, 448, 307(3 counts), இதச பிரிவுகள் கீழும், 2ம் எதிரி

மீது 148, 448, 307, 324 (2 counts) இதச பிரிவுகள் கீழும், 4 ம் எதிரி மீது 148, 448, 307 உ/இ 149, 323 (3 counts) இதச பிரிவுகள் கீழும், 5 ம் எதிரி மீது 148, 448, 307 இதச பிரிவுகள் கீழும் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் தெளிவாக அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என்றே இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

12.36). எனினும், வழக்கு சம்பவ நிகழ்விடம் அ.சா.1 ன் வீட்டின் உள்ளே என்று தெரிய வரும் நிலையிலும் மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகள் எவரும் தங்கள் சாட்சியத்தில் எதிரிகள் அவதுறாக திட்டியதாக வார்த்தைகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், மேலும் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், 1, 2 4, 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b) மற்றும் 506 (ii) ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

*13). இவ்வழக்கை மேற்கண்டவாறு பரிசீலித்ததில் 1ம் எதிரி மீது 148, 448, 307(3 counts), இதச பிரிவுகள் கீழும், 2 ம் எதிரி மீது 148, 448, 307, 324 (2 counts) இதச பிரிவுகள் கீழும், 4 ம் எதிரி மீது 148, 448, 307 உ/இ 149, 323 (2 counts) இதச பிரிவுகள் கீழும், 5 ம் எதிரி மீது 148, 448, 307 இதச பிரிவுகள் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும், 1 ,2, 4 மற்றும் 5 எதிரிகள் மீதான 294(b), 506(ii) இ.த.ச.பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை என்றும்*

*இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.*

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6-ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

A KADHIRAVAN

Digitally signed by A KADHIRAVAN
Date: 2026.06.06 18:58:51 -0800

உதவி அமர்வு நீதிபதி

செஞ்சி.

*14). 1ம் எதிரி மீது 148, 448, 307(3 counts), இதச பிரிவுகள் கீழும், 2 ம் எதிரி மீது 148, 448, 307, 324 (2 counts) இதச பிரிவுகள் கீழும், 4 ம் எதிரி மீது 148, 448, 307 உ/இ 149, 323 (2 counts) இதச பிரிவுகள் கீழும், 5 ம் எதிரி மீது 148, 448, 307 இதச பிரிவுகள் குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு வழங்க இருக்கும் தண்டனை குறித்து பிரிவு 235 (2) கு.வி.மு.சன்படி 1, 2, 4, 5 எதிரிகளிடம் வினவிய போது,*

*1ம் எதிரி*

"குடும்பத்தை பராமரிக்க வேண்டும் எனவே குறைந்த தண்டனை வழங்குங்கள்."

*2 ம் எதிரி*

"குடும்பத்தை பராமரிக்க வேண்டும் எனவே குறைந்த தண்டனை வழங்குங்கள்."

*4 ம் எதிரி*

"குடும்பத்தை பராமரிக்க வேண்டும் எனவே குறைந்த தண்டனை வழங்குங்கள்."

*5 ம் எதிரி*

"குடும்பத்தை பராமரிக்க வேண்டும் எனவே குறைந்த தண்டனை வழங்குங்கள்.'

*என்று 1, 2, 4, 5 எதிரிகள் கூறினர். ஆகவே, 1, 2, 4, 5 எதிரிகளின் மேற்கண்ட வேண்டுகோளைக் கருத்தில் கொண்டும், இவ்வழக்கு குற்றத்தின் தன்மை உறவினர்களுக்கிடையிலான சொத்து தகராறால் ஏற்பட்டுள்ளதயும் மற்றும் 1, 2, 4, 5 எதிரிகள் கூறிய அவர்களின் குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள உச்சபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.*

*முடிவாக 1 , 2, 4, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 148-ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா ஒரு ஆண்டு மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/ விதித்தும் அபராதம் செலுத்தத் தவறினால் தலா ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச.பிரிவு 448 ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/ விதித்தும் அபராதம் செலுத்தத் தவறினால் தலா இரண்டு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 2 மற்றும் 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு*

307 ன்படியான குற்றச்சாட்டிற்கு தலா 5 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.5,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா மூன்று மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் 1ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 307( 3 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 5 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.5,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா மூன்று மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 4 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 307 உ.இ 149 ன்படியான குற்றச்சாட்டிற்கு 3 வருடங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் 2 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 324( 2 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 3 மாதங்கள் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.1,000/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா ஒரு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், 4 ம்எதிரி மீதான இ.த.ச.பிரிவு 323( 3 counts) ன் கீழான குற்றச்சாட்டிற்கு தலா 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் அபராதம் தலா ரூ.500/- விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் தலா ஒரு வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச.பிரிவு 235(2)ன் கீழ் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2, 4, 5 எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட மேற்கண்ட சிறை தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச 235(2)ன்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 1 மற்றும் 5 எதிரிகள் ஏற்கனவே சிறையிலிருந்த 11.06.2016 முதல் 14.09.2016 வரையிலான காலத்தை கு.வி.மு.ச.பிரிவு

*428ன் கீழ் 1 மற்றும் 5 எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனை காலத்திலிருந்து கழிக்க உத்தரவிடப்படுகிறது.*

*மேலும் 1, 2, 4, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(b), 506(ii)-ன்படியான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று 1, 2, 4, 5 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

வழக்கு சொத்துக்களான சி.பி.எண்.16/2017 இரும்பு பைப்பால் கைப்பிடி போட்ட சுமார் 47 செ.மீ . நீளமுள்ள கொடுவா கத்தி-1 (இரும்பு கைப்பிடி சுற்றளவு 8.5 செ.மீ கத்தி முன்பகுதி சுமார் 3 செ.மீ உள்ளது. 2). சுமார் 79.5 செ.மீ நீளமுள்ள மரதுடுப்பு பிளந்த நிலையில் உள்ளது மத்தியில் சுற்றளவு சுமார் 12.5 செ.மீ. உள்ளது) பயனற்றது என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6-ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

A KADHIRAVAN

Digitally signed by A KADHIRAVAN
Date: 2026.06.06 18:59:05 -0800

உதவி அமர்வு நீதிபதி

செஞ்சி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :

அ.சா.1 – திரு. சக்திவேல்

அ.சா.2 – திருமதி. மாரியம்மாள்

அ.சா.3– திருமதி. சங்கரி

அ.சா.4 – செல்வி. கலைமணி

அ.சா.5 – செல்வி.குணசுந்தரி

அ.சா.6 – திரு. தணிகாச்சலம்

அ.சா.7 – திரு. சேகர்

அ.சா.8 – திரு. காண்டீபன்

அ.சா.9 – திரு.சிதம்பரம்

அ.சா.10 – திரு.மணிபாலன்

அ.சா.11- திரு. கோகுல்ராஜ்

அ.சா.12 – திரு. மண்ணாங்கட்டி

அ.சா.13 – திருமதி ருக்குமணி

அ.சா.14 – திரு. சங்கர்

அ.சா.15 – திரு. குமார்

அ.சா.16 – திரு. வெற்றிவேல்

அ.சா.17 – திரு. உத்திரகுமார்

அ.சா.18 – திரு. முத்துவேல் (மருத்துவர்)

அ.சா.19– திரு. பார்வதி (காவலர்)

அ.சா.20 – திரு. பஞ்சாட்சாரம்

அ.சா.21 – திரு. பவுனம்மாள்

அ.சா.22– திரு. சகாதேவன்

அ.சா.23 – திரு.மகாலிங்கம்

அ.சா.24 – திரு. கல்யாணராமன்

அ.சா.25– திரு. சஞ்ஜெய் சுகுமார் (மருத்துவர்)

அ.சா.26 – திரு. மகாலட்சுமி

அ.சா.27 – திரு. ராஜீவ் (தடய அறிவியல் அலுவலர்)

அ.சா.28 – திரு. குமார் ( உதவி ஆய்வாளர்)

அ.சா.29 – திரு. பழனி (காவல் ஆய்வாளர்)

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10.06.2016 | புகார் வாக்குமுலம் |
| அ.சா.ஆ.2 | 10.06.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.9 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | -- | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.9 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | -- | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.12 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 10.06.2016 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5(அ) | 10.06.2016 | ராமனின் காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | 10.06.2016 | சக்திவேல் காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 10.06.2016 | மாரியம்மாள் காயச்சான்று |
| அ.சா.ஆ.8 | 10.06.2016 | சங்கரி காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | 10.06.2016 | குணசுந்தரி காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | 10.06.2016 | கலைமணி காயச்சான்று |
| அ.சா.ஆ.11 | | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.12 | | தடய அறிவியல் அறிக்கை |
| அ.சா.ஆ.13 | 10.06.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.14 | 10.06.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.15 (ஆக மீண்டும்) | 10.06.2016 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.16 | -- | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.17 | 11.06.2016 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.18 | 11.06.2016 | படிவம்-95 |
| அ.சா.ஆ.19 | 28.06.2016 | பிரிவு மாற்று அறிக்கை |
| அ.சா.ஆ.20 | 28.06.2016 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.21 | | மருத்துவ சான்று |

அரசு தரப்பு சான்று பொருள்

அ.சா.பொ.1 - இரும்பு கைபிடியுடன் கூடிய கொடுவா கத்தி

அ.சா.பொ.2 - நடுவில் பிளவு உள்ள சுமார் 3 அடி நீள 1 இன்ச் முதல் 2 இன்ச் வரை அகன்ற வடிவில் உள்ள கட்டை.

எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள்

எ.த.சா.ஆ.1 10.06.2016 வளத்தி காவல் நிலைய குற்ற எண்.157/2016 ன் முதல் தகவல் அறிக்கை நகல்

A KADHIRAVAN Digitally signed by A KADHIRAVAN Date: 2026.06.06 18:59:19 -0800

உதவி அமர்வு நீதிபதி

செஞ்சி.